AUGUST 27, 2020
THURSDAY
VOL: 006/082
RS. 10.00
PROVINCIAL

Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

தமிழ் Mirror



வடக்கு, கிழக்குக்கு

# ‘சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வை வழங்கவும்’

**இடைக்கால கணக்கறிக்கையில், அரசாங்கத்தின் செலவு 1,700 பில்லியன் ரூபாயாகும்**

**1,300 பில்லியன் ரூபாயைக் கடனாகப் பெற்றுக்கொள்வதற்கும் அரசாங்கம் தீர்மானம்**

‘வெள்ளை யானை’ என்றழைக்கப்படும் மாகாண சபை முறைமையை இல்லாமல் செய்வதென்றால், வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு, சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வை வழங்க வேண்டுமென்று, முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ள மங்கள சமரவீர, மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

19ஆவது திருத்தம் ஒழிப்பு:

## வெள்ளி முதல் சஜித் முக்கியமான நகர்வுகள்



அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தை ஒழிப்பதற்காக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் நகர்வுகள் தொடர்பில், எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ, முக்கியச் சந்திப்புகளில் ஈடுபடவுள்ளார்.

சிவில் பிரதிநிதிகளை எதிர்வரும் 28ஆம் திகதியன்று நாடாளுமன்றத்தில் சந்திக்கவுள்ள சஜித் பிரேமதாஸ,

தொடர்ச்சி P2

## இராஜாங்க அமைச்சராக சுசில் நியமனம்

புதிய அரசாங்கத்தில், கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகம் மற்றும் தொலைக்கல்வி மேம்பாடு இராஜாங்க அமைச்சராக, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேம ஜயந்த நியமிக்கப்பட்டுள்ளார்.



தொடர்ச்சி P2

## ‘ரயில்-பஸ் கட்டணங்களை அதிகரிக்கும் நோக்கமில்லை’

கொரோனா வைரஸ் காரணமாக பொருளாதார பிரச்சினைகளுக்கு மக்கள் முகங்கொடுத்திருக்கும் நிலையில், அவர்களுக்கு மென்மேலும் சுமையை அதிகரிப்பதற்கு எவ்விதமான நோக்கமும் இல்லையெனத் தெரிவித்துள்ள போக்குவரத்து



தொடர்ச்சி P2

## ‘கலரிகள் மூடப்பட்டன’

சுகாதார அதிகாரிகளிடமிருந்து பரிந்துரைகள் பெறப்படும் வரையிலும் நாடாளுமன்றத்தில் மக்கள் கலரிகள் யாவும் தற்காலிகமாக மூடப்பட்டிருக்குமென படைகல சேவிதர் நரேந்திர பெர்ணான்டோ அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ‘ஐயாவுக்கு சுகவீனம்; கூட்டமும் கூடாது’

க.அகரன்



தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனுக்கு சுகவீனம் ஏற்பட்டுள்ளமையால், எதிர்வரும் நாடாளுமன்ற அமர்வுக்குப் பின்னர் கூடவிருந்த நாடாளுமன்றக் குழு,

தொடர்ச்சி P2



## சிநேரகபூர்வ சந்திப்பு...

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவை, நாடாளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சி அலுவலகத்தில், நேற்று (26) சிநேகபூர்வமாக சந்தித்து கலந்துரையாடினார்.

## ஐ.தே.கவுக்கு எஸ்.ஜே.பீ 2 தெரிவுகளை முன்வைத்தது

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியானது ஐக்கிய தேசிய கட்சிக்குள் எழுந்திருக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு, இரண்டு பரிந்துரைகளை முன்வைத்துள்ளது.

கண்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்த தேசிய அமைப்பாளரான திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி, “ஐக்கிய தேசிய கட்சி பற்றிய தங்களுடைய உணர்வுகளை, மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர். கட்சி தற்போது பூச்சியத்தில் உள்ளது” என்றார்.



தொடர்ச்சி P2

அரசமைப்புப் பேரவை:

## அமைச்சர் மஹிந்தானந்த ஜனாதிபதியின் பிரதிநிதி

அரசமைப்புப் பேரவையில், தனது பிரதிநிதியாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவை நியமித்துள்ளார்.

10 உறுப்பினர்களைக் கொண்ட அரசமைப்புப் பேரவைக்கு பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் பதவி ரீதியாக உள்ளீர்க்கப்படுவார்கள்.

பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் தலா ஒவ்வொரு பிரதிநிதிகளைத் தங்களுடைய பிரதிநிதிகளாக நியமிப்பார்.



தொடர்ச்சி P2

## இடவசதிகள் இன்மையால் விமானங்கள் இரத்தாகின

நாட்டுக்குத் திரும்பவிருக்கும் வெளிநாடுகளைச் சேர்ந்த இலங்கையர்களை அழைத்துவருதல் கைவிடப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் இடவசதிகள் போதியளவு இன்மையால், நிலையங்கள் யாவும் நிரம்பியிருப்பதால் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதென அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இஸ்ரேலில் வசிக்கும் இலங்கையர்களை,



தொடர்ச்சி P2

## ‘19ஐ ஒழித்தல் தனிப்பட்ட நிகழ்ச்சி’

**ராஜித தெரிவிப்பு: 2/3 வெற்று காசோலை அல்ல என்கிறார்**

அரசமைப்பின் 19ஆவது திருத்தம், தனிப்பட்ட நிகழ்ச்சிநிரல் மற்றும் நோக்கங்களின் அடிப்படையிலேயே முன்னெடுக்கப்படுகின்றனவெனத் தெரிவித்த முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன, இரட்டைக் குடியுரிமைகளைக் கொண்டவர்களை, நாடாளுமன்றத்துக்குள் உள்ளீர்த்துக்கொள்ளும் வகையிலேயே திருத்தப்படவுள்ளது என்றார்.



தொடர்ச்சி P2




புதிய அரசாங்கத்தின் ‘பத்திக்’ இராஜாங்க அமைச்சராக நியமிக்கப்பட்ட தயாசிறி ஜயசேகர, கைத்தறி இயந்திரத்தை இயக்கிப் பார்ப்பதைப் படத்தில் காணலாம். அவர், ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வின் போது, ‘பத்திக்’ ஆடைகளை அணிந்தவாறு சபையமர்வில் பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இடைக்கால கணக்கறிக்கை: இன்றும் நாளையும் விவாதம்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசாங்கம், 2020 டிசெம்பர் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்கான அரச செலவீனங்களுக்காக, இடைக்கால கணக்கறிக்கையை இன்று (27) சமர்ப்பிக்கவுள்ளது.

இந்த இடைக்காலக் கணக்கறிக்கை மீது, இன்றும் (27) நாளையும் (28) விவாதம் நடத்தப்படும். ஆளும் கட்சியைச் சேர்ந்த சகல உறுப்பினர்களும் இருநாள்களும் கட்டாயமாக, சபையில் இருக்கவேண்டுமென, ஆளும் கட்சியின் பிரதம கொறடா, அறிவுறுத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வை வழங்கவும்’



மாகாண சபை முறைமையை முற்றாக இல்லாதொழிக்க வேண்டும் எனவும் அதற்கான ஆதரவை, மக்களிடமிருந்து திரட்டும் வகையில், சமூக வலைத்தளங்களில் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்நிலையிலேயே, மங்கள சமரவீர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“இதேவேளை, நாட்டை அபிவிருத்திச் செய்வதை விடவும் தங்களுடைய அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக, மூன்றிலிரண்டு பெரும்பான்மையைத் தேடியோடியது. இதனால், அரசாங்கத்தின் வருமானத்தில் மூன்றிலிரண்டு குறைந்துள்ளது. தற்போதைய அரசாங்கத்திடம் பொருளாதாரக் கொள்கை இல்லை என்பதனால்த்தான் இவ்வாறான நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது” என, முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

2020 இறுதி நான்கு மாதங்களுக்காக புதிய அரசாங்கத்தின் ஊடாக, நாடாளுமன்றத்தில் இன்று (27) சமர்ப்பிக்கவிருக்கும் இடைக்காலக் கணக்கறிக்கையில், அரசாங்கத்தின் செலவு 1,700 பில்லியன் ரூபாயாகும். அரசாங்கத்திடம் நிதி இன்மையால், 1,300 பில்லியன் ரூபாயைக் கடனாகப் பெற்றுக்கொள்வதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது எனத் தெரிவித்துள்ள அவர், இது அரசாங்கத்திடம் பொருளாதாரக் கொள்கையொன்று இல்லையென்பதை எடுத்துக்காட்டுகிறது என்றார்.

பிளாஸ்டிக், கண்ணாடிப் போத்தல்களுக்குப் பதிலாக, மட்பாண்டக் குவளைகளின் ஊடாகத் தண்ணீர் பருகுவதாலோ, வாரத்துக்கு ஒருதடவை அரச ஊழியர்கள் ‘பத்திக்’ ஆடைகளை அணிவதன் ஊடாகவோ, நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாதெனத் தெரிவித்த அவர், 2020 முதல் காலாண்டின் பொருளாதார வளர்ச்சி வேகம், 1.6 சதவீதம் எதிர்மறை மதிப்பில் இருந்தது.

இந்நிலையில், மாகாண சபைகள் ஆரம்பிக்கப்பட்ட 1989ஆம் ஆண்டிலிருந்து இன்று வரையிலான 31 வருடக் காலப்பகுதியில், அவற்றால் மக்களுக்குக் கிடைத்த பலன்கள் எவையென ஆராய்ந்து, விரிவான அறிக்கையொன்றைத் தனக்குக் கையளிக்குமாறு, உள்ளூராட்சி மன்றங்கள், மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சர் சரத் வீரசேகர அமைச்சின் அதிகாரிகளிடம் பணிப்புரை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெள்ளி முதல் சஜித் முக்கிய நகர்வுகள்

அப்பிரதிநிதிகளின் கருத்துகளையும் கேட்டறிந்து கொள்ளவுள்ளார்.

தங்களுக்குக் கிடைத்திருக்கும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தி, 19ஆவது திருத்தத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அரசாங்கம் அறிவித்திருந்தது.

இதேவேளை, தனது கொள்கை விளக்க உரையின் போது, 19ஆவது திருத்தத்தை முற்றாக ஒழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இதேவேளை, 19ஆவது திருத்தத்தில் மேற்கொள்ளவேண்டிய திருத்தங்கள், 20ஆவது திருத்தத்துக்கான சட்டவரைபு ஆகியவற்றைத் தயாரிப்பதற்காக, நீதியமைச்சர் அலி சப்ரி தலைமையில், அமைச்சர்களான தினேஸ் குணவர்தன, உதய கம்மன்பில, நிமல் சிறிபால டி சில்வா ஆகியோர் அடங்கிய அமைச்சரவை இணை குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ‘ரயில்–பஸ் கட்டணங்களை அதிகரிக்கும் நோக்கமில்லை’

அமைச்சர் காமினி லொக்குகே, ரயில், பஸ் ஆகியவற்றுக்கான கட்டணங்கள் அதிகரிக்காது என்றார்.

“போக்குவரத்துக் கட்டணங்களை அதிகரிப்பதற்குப் பதிலாக, ரயில், பஸ்களில் பொருள்கள் ஏற்றியிறக்குவதன் ஊடாகப் புதிய வருமான வழிகளைத் தேடிகொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்” என்றார்.

இதேவேளை, இவ்விரு சேவைகளிலும் செலவுகளைக் குறைப்பதற்காக, திறமையான சேவையை முன்னெடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவித்துள்ள அவர், ஜனாதிபதியின் அறிவுறுத்தல்களுக்கு அமைய, பொதுப் போக்குவரத்துச் சேவைகளைத் திறம்பட வழங்குவதற்கான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் எடுக்கப்படும் என்றார்.

# ‘கலரிகள் மூடப்பட்டன’

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் முதலாவது அமர்வு, ஓகஸ்ட் 20ஆம் திகதியன்று ஆரம்பித்துவைக்கப்பட்டது. மறுநாளும் அமர்வு நடைபெற்றது.

அதன் தொடர்ச்சியாக, இன்றும் (27) நாளையும் (28) நாடாளுமன்ற அமர்வுகள் நடைபெறவிருக்கின்றன. முதல் இரண்டு நாள்களுக்கும் பொதுமக்களும் பார்வையாளர்களும் அனுமதிக்கப்பட்டனர். எனினும், பொதுமக்கள் கலரியிலும் சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடிக்கவேண்டும் என்பதால், அதற்கான பரிந்துரைகள் கிடைக்கும் வரையிலும் அக்கலரிகள், தற்காலிகமாக மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக்குப் பின்னர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபைக்குள்ளும் நாடாளுமன்றத்துக்குள்ளும் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும் என்பது தொடர்பில், சுகாதார அமைச்சால், பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன் வழிகாட்டல்களும் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ‘ஐயாவுக்கு சுகவீனம்; கூட்டமும் கூடாது’

கூடாதெனத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், தெரிவில் பிரச்சினைகள் ஏற்படாது என்றார்.

கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளர், கொறடா பதவிகள் தொடர்பில், நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுமென அறிவிக்கப்பட்டது. இந்நிலையிலேயே மேற்படி விவகாரம் தொடர்பில் அவரிடம் கேட்டபோதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கூட்டமைப்பின் பேச்சாளராகத் தன்னை நியமிப்பதற்கு, பங்காளிக் கட்சிகளின் தலைமைகளின் கூட்டத்தின் போதே முடிவு எடுக்கப்பட்டதெனத் தெரிவித்த அவர், எனினும், நாடாளுமன்றக் கூட்டத்தின் போதே, உத்தியோகபூர்வமாகத் தெரிவு செய்யப்படவேண்டும். அக்குழு இன்னும் கூடவில்லை. அக்குழு கூடும்போதே தெரிவுகள் இடம்பெறும் என்றார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ பேச்சாளரெனத் தன்னை, இப்போதைக்கு அழைக்க முடியாதெனத் தெரிவித்த அவர், தலைவர் சம்பந்தன் ஐயாவுக்கு சுகவீனம் ஏற்பட்டுள்ளதால், நாடாளுமன்றக் குழுக்கூட்டம் இந்த அமர்வுக்குப் பின்னர் கூடாது என்றார்.

# இடவசதிகள் இன்மையால் விமானங்கள் இரத்தாகின

நாட்டுக்கு திரும்பவிருக்கும் வெளிநாடுகளைச் சேர்ந்த இலங்கையர்களை அழைத்துவருதல் கைவிடப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் இடவசதிகள் போதியளவு இன்மையால், நிலையங்கள் யாவும் நிரம்பியிருப்பதால் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதென அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இஸ்ரேலில் வசிக்கும் இலங்கையர்களை, நாட்டுக்குள் அழைத்துவரும் நடவடிக்கைகள் ஓகஸ்ட் 19ஆம் திகதிமுதல் தொடர்ச்சியாக ஐந்து நாள்களுக்கு முன்னெடுக்கப்பட்டன. தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் போதியளவு இடவசதி இன்மையால், நேற்று (26) வரவிருந்த விமான சேவை இரத்துச் செய்யப்பட்டதென இஸ்ரேலிலுள்ள இலங்கைக்கான தூதுவராலயம் அறிவித்துள்ளது.

அதுமட்டுமன்றி, ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருந்த சகல விமான சேவைகளும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. மீள அறிவித்தல் விடுவிக்கப்படும் வரையிலும் இலங்கையர்கள் மீளவும் அழைத்துவருதல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதென அவ்வறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஐ.தே.கவுக்கு எஸ்.ஜே.பீ 2 தெரிவுகளை முன்வைத்தது

“ஆகையால், ஐக்கிய தேசிய கட்சிக்கு இரண்டே இரண்டு தெரிவுகள் மட்டுமே உள்ளன. அதில், எவ்விதமான நிபந்தனைகளும் இன்றி, சஜித் பிரேமதாஸவை, ஐ.தே.கவின் தலைவராக்க வேண்டும். இல்லையேல், ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணியுடன் ஐக்கிய தேசிய கட்சி இணையவேண்டும்” என்றார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியை ஆதரித்தமையால் கட்சியின் உறுப்புரிமையிலிருந்து விலக்கப்பட்ட ஐ.தே.கவின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடன் ஐ.ம.சக்தி உறுதியுடன் கைகோர்த்துக் கொண்டிருக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

ஐ.தே.கவின் ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களை ஓரங்கட்டுவதையும் அவர்களைக் கட்சியிலிருந்து நீக்குவதையும் ஐ.தே.க கைவிடவேண்டுமெனக் கோரியுள்ள அவர், இல்லையேல், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களைக் கட்சியிலிருந்து நீக்குவதற்கு எதிராக, சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

“நாங்கள், ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கினோம். ஏனெனில், கட்சி உறுப்பினர்களின் அடிமட்ட வேர் எங்களுக்குத் தெரியும்” என்றார்.



# இடைக்காலக் கணக்கறிக்கை; இன்றும் நாளையும் விவாதம்

செப்டெம்பர் 1ஆம் திகதி முதல் டிசெம்பர் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள், அரச செலவீனங்களுக்கான, இடைக்கால கணக்கறிக்கை தொடர்பிலான விவரங்கள், இன்றைய ஒழுங்குப்பத்திரத்தில் உள்ளடக்கப்படும்.

இருதினங்களும் கால 9.30 மணிமுதல் மாலை 6.30 மணிவரையிலும் விவாதம் நடத்தப்படும் என்பதுடன், இந்த இடைக்காலக் கணக்கறிக்கைக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தலைமையில் நேற்றுமாலை கூடிய அமைச்சரவையில் அங்கிகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமைச்சர் மஹிந்தானந்த ஜனாதிபதியின் பிரதிநிதி

அவர்களின் பெயர்கள் இன்னும் குறிப்பிடப்படவில்லை என்பதுடன், சிறுபான்மைக் கட்சிகளின் பிரதிநிதிகளும் இன்னும் பெயரிடப்படவில்லை.

இந்நிலையில், நல்லாட்சியின் போது நியமிக்கப்பட்ட ஜாவிட் யூசுப், பேராசிரியர் நாகநாதன் செல்வகுமார் ஆகியோர் அரசமைப்புப் பேரவையில், சிவில் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாகத் தொடர்ந்தும் அங்கம்வகிப்பார்கள்.

முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையிலான அரசமைப்புப் பேரவையில், கலாநிதி ஜயந்த தர்மபாலா, பேரவையிலிருந்து இராஜினாமா செய்தார். அவருடைய வெற்றிடமும் இன்னும் நிரப்பப்படவில்லை.

அரசமைப்புப் பேரவையில் அங்கம் வகிக்கும், சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளை, புதிய அரசாங்கம் ஆட்சிப்பீடம் ஏறினாலும் மாற்ற முடியாது. அரசமைப்பின் 19ஆவது திருத்தத்துக்கு அமைய, அவர்கள் நியமிக்கப்பட்டு, மூன்று ஆண்டுகள் வரை அவர்களை நீக்கவும் முடியாது.

# இராஜாங்க அமைச்சராக சுசில் நியமனம்

அவருக்கான நியமனக் கடிதம், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால், நேற்று (26) வழங்கிவைக்கப்பட்டது. அதனடிப்படையில், இராஜாங்க அமைச்சர்களின் எண்ணிக்கை 36ஆக அதிகரித்துள்ளது.

# ‘19ஐ ஒழித்தல் தனிப்பட்ட நிகழ்ச்சி’



கொழும்பில் நேற்று (26) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த அவர், தனிப்பட்ட நோக்கங்களுக்காகவே பல அரசாங்கங்கள் அரசமைப்பில் திருத்தங்களை மேற்கொண்டிருந்தன என்றார்.

ஆனால், 19ஆவது திருத்தம் என்பது பொதுமக்களுக்கு அதிகாரம் அளிப்பதை நோக்கமாகக் கொண்ட ஒரேயோர் அரசமைப்புத் திருத்தமாகும் எனத் தெரிவித்த அவர், தங்களுக்குக் கிடைத்திருக்கும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பயன்படுத்தி, அதனை மாற்றுவது நியாயமானது அல்ல என்றார்.

2/3 பெரும்பான்மை என்பது, தாங்கள் விரும்பியதைச் செய்வதற்கான வெற்றுக் காசோலை அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டுமெனத் தெரிவித்த ராஜித சேனாரத்ன, அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய கூறுகளைப் பாதுகாக்க, அனைத்து சமூகக் குழுக்களுடனும் நாங்கள் இணைந்து பணியாற்றுவோம் என்றார்.

> **“ பெரும்பான்மை என்பது, வெற்றுக் காசோலை அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அரசமைப்பின் 19ஆவது திருத்தத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட முக்கிய கூறுகளைப் பாதுகாக்க, அனைத்து சமூகக் குழுக்களுடனும் இணைந்து பணியாற்றுவோம்**

# சந்திப்பு...





கிழக்கு மாகாணத்துக்கு, நேற்று (26) விஜயம் செய்திருந்த இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா வீ டெப்லீக்ஸ், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை சந்தித்து கலந்துரையாடினார்.

தமிழ்க் கட்சிகள், தேசிய கட்சிகள், தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு எதிராக நடந்து கொண்டமையால், மக்களுக்கு மத்தியில் கொடுக்கப்பட்ட உதவிகள், பண உதவிகள் ஏனைய நடவடிக்கைகள், அத்துடன், விருப்பு வாக்குகளைப் பெறுவதற்காக முயற்சி ஆகியன காரணமாக, கட்சி கடந்த காலங்களைப் போல போதிய ஆசனங்களைப் பெற முடியவில்லை” என சம்பந்தன் எடுத்துரைத்துள்ளார். (படங்களும் தகவலும்: அப்துல்சலாம் யாசீம்)

# ‘பலாலி அபிவிருத்திக்கு இந்தியா 300 மில்லியன்’

யாழ்பாணம்-பலாலி விமான நிலையத்தின் அபிவிருத்திப் பணிகளுக்காக, இந்திய அரசாங்கத்திடமிருந்து, 300 மில்லியன் ரூபாய் கிடைக்கப்பெறுமெனத் தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேவுடன், நேற்று முன்தினம் (25) நடைபெற்ற சந்திப்பிலேயே, இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக, அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் இரு வாரங்களுக்குள், இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அரசாங்கம் கைசாத்திடவுள்ளதாகத் தெரிவித்துள்ள அவர், இந்த ஒப்பந்த வரைவு, தற்போது தாயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். பலாலி விமான நிலையமானது, இரண்டாம் உலகப் போர் நடைபெற்ற காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டதெனத் தெரிவித்துள்ள அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, இந்தியாவின் நிதியுதவி கிடைக்குமென உறுதி செய்யப்பட்ட பின்பே, இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.



# ‘பாலர் வகுப்பினருக்கு முகக்கவசம் வேண்டாம்’

பாலர் பாடசாலை மாணவர்களுக்கு, ‘மூச்சு அடைப்பு ஏற்படும்’ பட்சத்தில், அவர்களுக்கு அதனைக் கூறத் தெரியாது என்று தெரிவித்த இலங்கை மருத்துவ ஆய்வு நிறுவகத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஜயருவன் பண்டார, பாலர் பாடசாலை சிறுவர்களுக்கு, முகக்கவசங்களை அணிவிக்க வேண்டாமெனவும் கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்த அவர், மாணவர்கள் பாடசாலை வெளி வளாகத்தில் நடமாடும் போது, முகக்கவசங்களை அணிந்துகொள்வது கட்டாயம் எனவும் தெரிவித்தார்.

அதேபோல், பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் பஸ்களை, மிகத் தூய்மையாக வைத்திருக்க வேண்டுமெனத் தெரிவித்த அவர், கொவிட் - 19 வைரஸ் நாட்டுக்குள் உக்கிரமடைந்து காணப்பட்ட காலத்தை விடவும், தற்போது அதிகளவில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றார்.

அத்துடன், ‘கொவிட் - 19 வைரஸ் தொற்றிய நோயாளர்களைக் கண்டறியும் சோதனைகளை, சுகாதார அமைச்சு கைவிடவில்லை என்பதுடன், வைரஸ் தொற்று இல்லை எனக் கருதி, பரிசோதனைகளை நிறுத்திவிடக்கூடிய நிலைமை இதுவரை உருவாகவில்லை என்றார்.

எவ்வாறாயினும், விடுமுறைக் காலங்களில் மாணவர்களுக்குக் கிடைத்த அறிவுரைகளைக் கொண்டு, தற்போதைய சூழலை அவர்கள் எதிர்க்கொள்ள முடியும் என்று கூறிய அவர், மாணவர்களுக்கு பாதுகாப்பான இடமாகப் பாடசாலைகள் இருந்தாலும், பாதுகாப்பை பலப்படுத்தும் பொறுப்பில் பெற்றோர், ஆசிரியர்கள் உணர்ந்துச் செயற்பட வேண்டும் என்றார்.

அதேபோல், ‘இன்று முகக்கவசம் அணியும் வழக்கத்தைப் பலரும் கைவிட்டுள்ளனர் என்று கூறிய அவர், பாலர் பாடசாலை மாணவர்களுக்கு முகக்கவசம் அணிவிப்பது அவசியம் எனினும், அவர்களுக்கு மூச்சுவிட கஷ்டமான நிலைமை வரும்போது, அவர்கள் வேறுவிதமான நோய்களுக்கு ஆளாகக்கூடும்’ என்றும் அவர் கூறினார்.

# மீளச் சேவையில் ஈடுபடும் ரயில்கள்



தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சில ரயில்களை, மீளவும் சேவையில் இணைப்பதற்கு, ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, இலக்கம் 4021 மற்றும் 4022 போன்ற ரயில்கள், சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் இலக்கம் 1001 என்ற ரயில் ஞாயிற்றுக்கிழமைகளிலும் மீளவும் சேவையில் ஈடுபடுமென, திணைக்களம் தெரிவித்துள்ளது.

கல்கிஸையில் பயணத்தை ஆரம்பித்து கொழும்பு - கோட்டை ஊடாகக் காங்கேசன்துறை வரை, காலை 05.10க்கு தினமும் பயணித்த ரயிலும் காங்கேசன்துறையில் இருந்து கொழும்பு - கோட்டை ஊடாகக் கல்கிஸை நோக்கி பி.ப 01.05க்கு தினமும் பயணித்த இலக்கம் 4022 என்ற ரயிலும், இம்மாதம் 29/30/31 மற்றும் செப்டெம்பம் 01ஆம் திகதிகளிலும், மேற்குறிப்பிட்ட நேரத்துக்கமைய பயணத்தில் ஈடுபடுத்தப்படுமென, ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன், கொழும்பு - கோட்டையில் இருந்து பதுளை நோக்கி மு.ப 06.45க்கு பயணித்த இலக்கம் 1001 என்ற ரயிலானது, இம்மாதம் 28/29/30 ஆகிய தினங்களில், பதுளையில் இருந்து கொழும்பு - கோட்டை நோக்கி, மு.ப 08.00 மணிக்கும் தினமும் பயணத்தில் ஈடுபட்டுவந்த இலக்கம் 1002 என்ற ரயில், 29/31 மற்றும் அடுத்த மாதம் 01ஆம் திகதிகளிலும் மேற்குறிப்பிட்ட நேரத்தில் சேவையில் ஈடுபடுமென, ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

# ஐ.நா பிரதிநிதிகளுடன் நீதி அமைச்சர் சந்திப்பு



நீதியை நிலைநாட்டல் தொடர்பாக, ஐக்கிய நாடுகள் சபையிடமிருந்து கிடைக்கும் ஒத்துழைப்புகள் தொடர்பில் ஆராய்வதற்கான ஐ.நாவின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான வதிவிடப்பிரதிநிதிகள் குழுவொன்று, நீதி அமைச்சர் அலி சப்ரியை, நேற்று (26) சந்தித்துக் கலந்துரையாடியுள்ளது.

நீதி அமைச்சில் இடம்பெற்ற மேற்படி சந்திப்பில், ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட, தொடர்பாடல் பிரதிநிதியான ஹனா சிங்கர், ஐ.நா அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான இலங்கைப் பிரதிநிதி ரொபட் ஜூஹ்காம், ஐ.நா சிறுவர் நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி டிம் சட்டன், ஐ.நா போதைப்பொருள், குற்றத்தடுப்பு அலுவலகத்தின் பிரதானியான டொலர் வெஸ்டன் ஆகியோரும் கலந்துகொண்டுள்ளனர். இலங்கை சார்பில், ஐ.நா அவிபிருத்தி வேலைத்திட்டங்களுக்கான இலங்கைக் குழுவின் தலைவர் சந்திரிகா கருணாரத்ன, நீதி அமைச்சின் செயலாளர் சட்டத்தரணி பிரியந்த மாயாதுன்னே, அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் சட்டத்தரணி ஜனக்க ரணதுங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.


## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 244(3) விதிகளின் கீழ் ஃபிளிக்ஸ் 11 (பிரைவட்) லிமிட்டட் பதிவு இல. P B 145 PV மற்றும் ஃபிளிக்ஸ் 11 டெக்னொ லொஜீஸ் (பிரைவட்) லிமிட்டட் பதிவு இல. P V 1728 கம்பனிகளின் கூட்டிணைப்பு பூர்த்தியாக்கபட்டதாக இத்தால் அறியத்தரப்படுகிறது.

கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் பெயர் :
**ஃபிளிக்ஸ் 11 (பிரைவட்) லிமிட்டட்**

திகதி : 10ம் திகதி ஓகஸ்ட் 2020

**கம்பனி செயலாளர்கள்**
**கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட்**

## HYDLE BERG CODE MACHINE

**Yellow button** - கிளச் மொடல் 1984 ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்டது. மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளதுடன் 1 1/2 வருடம் பாவனை செய்யப்பட்டுள்ளது. மிகவும் நல்ல நிலையில் இருக்கிறது. கொழும்பு - நுகேகொடை.

**கயான் – 07777 36 922 / 0717 512 382**

## பொது அறிவிப்பு

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

கம்பனியின் பெயர் :
**கிரேன்ட் வின்டோஸ் (பிரைவட்) லிமிட்டட்**
கம்பனியின் பதிவு இலக்கம் : **பி வீ 127895**
கூட்டிணைக்கப்பட்ட திகதி:
**08 டிசெம்பர் 2017 திகதியிடப்பட்டது**
பதிவு செய்யப்பட்ட முகவரி : **இல. 08,**
**சீவெலி மாவத்தை, விலோரா வத்தை, மொரட்டுவ.**

**கம்பனி செயலாளர்**

## அடோர்னி தத்துவ இரத்துச் செய்தல்

மாறவில, தல்வில, குனசெவன யில் வசிக்கும் ஜயலத் பெடிகே வீனஸ் அப்சரா ரணசிங்ஹ (தே. அ. ஆ. இல. 765160294V) ஆகிய நான் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசிற்கும் அதன் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறியத்தருவது யாதெனில் மாறவில, தல்வில, குனசெவன யில் வசிக்கும் மிஹிந்துகுலசூரிய டிலிப் ரோஹித லிவேரா (தே. அ. ஆ. இல. 602702677V) என்ற நபருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை பிரசித்த நொத்தாரிசு டிலானி பி மாரசிங்ஹ அவர்களாள் 2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 26 திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட 4818 ஆம் இலக்கத்தை கொண்ட அற்றோனித் தத்துவ ஆவணத்தில் 67 ஆம் அத்தியாயத்தில் 4731 ஆம் பதிவேட்டில் 2459 ஆம் தினக்குறிப்பேட்டின் கீழ் எழுதி பதிவுசெய்யப்பட்டதுமான அடோர்னி தத்துவ பத்திரம் இன்று முதல் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டதாகவும் இப்பொழுது முதல் மிஹிந்துகுலசூரிய டிலிப் ரோஹித லிவேரா என்பவரால் எனக்காகவோ அல்லது எனது பெயரின் மூலமாகவோ செய்யப்படும் எந்த ஒரு செயற்பாடுகளுக்கோ கொடுக்கல் வாங்கள்களுக்கும் நான் பொருப்பு கூற மாட்டேன் என்றும் இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

**ஜயலத் பேடிகே வீனஸ் அப்சரா ரணசிங்ஹ**

## வாடகைக்கு

இரத்மலானை - ஸ்ரீ தர்மராம வீதி வளவாவத்த பகுதியில் அறையொன்று வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு- 076-3750995

## விற்பனைக்கு

மெரூன் நிற KIA Sportage 2012 இறக்குமதி செய்யப்பட்டது. மெனுவல் டீசல் 4 வீல் 120,000KMS 5.4 மில்லியன் தொடர்புக்கு 0718342237








# காத்தான்குடியில் மர ஆலை தீக்கிரை

■ எம்.எஸ்.எம். நூர்தீன்

காத்தான்குடியில் நேற்று (26) அதிகாலை மர ஆலையொன்றில் ஏற்பட்ட தீ பரவலால், அம்மர ஆலை முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளது.

காத்தான்குடி மூன்றாம் குறிச்சி வாவிக்கரையோரம் உள்ள யு.எல். அக்பர் என்பவருக்குச் சொந்தமான மரஆலையே தீ பிடித்து எரிந்துள்ளது.

அதிகாலை 3.30 மணிக்கு தனது மர ஆலையில் தீ பரவல் ஏற்பட்டுள்ளதாகக் கிடைத்த தகவலையடுத்து, அங்கு சென்று பார்த்த போது, மர ஆலை எரிந்து கொண்டிருந்ததாக, அதன் உரிமையாளர் அக்பர் தெரிவித்தார். மட்டக்களப்பு மாநகர சபையின் தீ அணைக்கும் பிரிவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து, பொதுமக்கள், பொலிஸாரின் உதவியுடன் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

எனினும், மர ஆலை முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளதுடன், இங்கு வைக்கப்பட்டிருந்த பெறுமதியான மரங்களும் முற்றாக எரிந்துள்ளன. அத்துடன், மர ஆலைக்குள் நின்றிருந்த ஐந்து ஆடுகளும் கோழிகளும் எரிந்து, உயிரிழந்துள்ளதாகவும், உரிமையாளர் தெரிவித்தார்.

இந்தத் தீ பரவலுக்கான காரணம் குறித்து, விசாரணைகளை மேற்கொண்டுவருவதாக, காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

வயல் சீரமைப்பில் ஈடுபட்ட

# விவசாயிகள் மூவர் கைது

■ விஜயரத்தினம் சரவணன்

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் கமநலசேவை நிலையப் பிரிவுக்கு உட்பட்ட சூரியன் ஆற்றுக்கு அருகிலுள்ள வயல்களைச் சீரமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் மூவர், நேற்று முன்தினம் (25) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட விவசாயிகளிடம் இருந்து, சீரமைப்புப் பணிக்காகப் பயன்படுத்திய உபகரணங்களும் வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

அத்துடன், இனிவரும் காலங்களில், சூரியன் ஆற்றுக்கு அப்பாலுள்ள பகுதிகளில், மக்கள் விவசாயத்தில் ஈடுபடக்கூடாதென்று, வனவளத் திணைக்களத்தினரும் இராணுவத்தினரும் மிரட்டியதாக, அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இவ்வருட பெரும்போக நெற்பயிர்ச் செய்கைக்காக வயல் நிலங்களைச் சீரமைக்கும் பணிகளில் ஈடுபட்டிருந்த போதே, அப்பகுதிக்கு வந்த வனவளத் திணைக்களத்தினரும் இராணுவத்தினரும், இந்தப் பகுதிகளில் இனிமேல் பயிர்ச்செய்கை செய்யமுடியாதெனக் கூறியதுடன், அங்கு சீரமைப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த விவசாயிகளைக் கைதுசெய்தனர்.

இது தொடர்பில் கருத்துரைத்த அப்பகுதி விவசாயிகள், சூரியன் ஆற்றுக்கு அப்பால் தமிழ் மக்களுக்குச் சொந்தமான பெரியவெளி, பனிக்கவயல், மாரியாமுனை, கன்னாட்டி, அக்கரைவெளி ஆகிய வயல் நிலங்கள் காணப்படுகின்றனவெனவும் இவை அனைத்தும் உறுதிக் காணிகளாகுமெனவும் கூறினர்.

இடம்பெயர்வதற்கு முன்னரும் மீள் குடியேற்றத்தின் பின்னரும், இந்தப் பகுதிகளில் தாங்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும், அப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, அங்கிருந்த ஏனைய விவசாயிகளிடம் அடையாள அட்டைகளைப் பெற்றுப் பார்வையிட்ட இராணுவத்தினர், அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டதாகவும், விவசாயிகள் சாடினர்.

முதல் முறையாக

# பட்டப்பின் படிப்பு கற்கைகள் ஆரம்பம்

■ எம்.எஸ்.எம். ஹனீபா

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில், முதல் முறையாக தத்துவ முதுமாணி ஆய்வு மற்றும் கலாநிதி ஆய்வு பட்டப்பின் படிப்பு கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்பட உள்ளதாக, தொழில்நுட்பவியல் பீடத்தின் பீடாதிபதி கலாநிதி யூ.எல். அப்துல் மஜீட், நேற்று (26) தெரிவித்தார்.

பல்கலைக்கழகத் தொழில்நுட்பவியல் பீடத்தின் உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் திணைக்களத்தால் இவ் ஆய்வுக் கற்கைநெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றில் முதல்முறையாக ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் கூறினார்.

இப்பட்டப்பின் படிப்பு கற்கை நெறிக்கான நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளராக தொழில்நுட்பவியல் பீடத்தின் முன்னாள் பீடாதிபதி கலாநிதி எம்.ஜி. முஹம்மட் தாரீக் நியமிக்கப்பட்டுள்ளதாகவும்



> **இதற்கான விண்ணப்பம், செப்டம்பர் 21 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்**

அவர் தெரிவித்தார்.

இதற்கான விண்ணப்பம், செப்டம்பர் 21 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படுமெனவும், இது தொடர்பான மேலதிகத் தகவல்களை 0672052818 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விமல் கூறுவதைப் போல

# ‘தமிழ்த் தேசியம் தோற்றுவிடவில்லை’



■ என். ராஜ்

இந்த முறை நாடாளுமன்றத் தேர்தலின் மூலம், தமிழ்த் தேசிய அரசியலை முடிவுக்குக் கொண்டு வந்து விட்டோமென்று, தென்னிலங்கையில் உள்ள சில அரசியல்வாதிகளால் கருத்துகள் முன்வைக்கப்படுகின்றனவெனச் சாடிய வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம், இந்தத் தேர்தலில், யாழ்ப்பாணம் மாவட்டத்தைப் பொறுத்தவரை தமிழ்த் தேசியம் எந்த வகையிலும் பின்னடைவைச் சந்திக்கவில்லையெனவும் கூறினார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், தமிழ்த் தேசியம் அதேநிலையில் தான் இருக்கின்றதெனவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த மூன்று உறுப்பினர்களும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை சேர்ந்த ஓர் உறுப்பினரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியைச் சேர்ந்த இருவரும் தமிழ்த் தேசியத்தைச் சேர்ந்தவர்கள்தானெனவும் கூறினார். அப்படிப் பார்த்தால், ஆட்கள் மாறி இருக்கிறார்களே தவிர, கோட்பாடுகள் அல்லது தமிழ்த் தேசியம் மாறவில்லையெனத் தெரிவித்த அவர், தங்களை விட்டுப் பிரிந்துச் செல்லவில்லையெனவும் கூறினார். ஆகவே, தாங்கள் தொடர்ந்தும் தமிழ்த் தேசியம் சார்ந்து எல்லாரும் போராடுவோமெனத் தெரிவித்த அவர், விமல் வீரவன்ச கூறுவதைப்போல, தமது தமிழ்த் தேசியம் தோற்றுவிட்டது அல்லது தோற்கடித்து விட்டோம் எனக் கூறுவது தவறான விடயமெனவும் கூறினார்.



# அமெரிக்கத் தூதுவரின் சம்பூர் வருகை...



திருகோணமலை - சம்பூர், கூனித்தீவு நாவலர் வித்தியாலயத்தில். அமெரிக்க அரசாங்கத்தின் நிதியுதவியுடன், 93 மில்லியன் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடம், ஆசிரியர் விடுதி, கழிப்பறை ஆகியனவற்றின் திறப்புவிழா, பாடசாலை அதிபர் எஸ்.பாக்கியஸ்வரன் தலைமையில், நேற்று (26) நடைபெற்றது.

இந்நிகழ்வில், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா வீ டெப்லீக்ஸ், கிழக்கு மாகாண ஆளுநர் அநுராத யஹம்பத் ,கிழக்கு மாகாண கல்வியமைச்சின் செயலாளர் முத்துபண்டா உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர். (படங்கள் - தீஷான்அஹமட், ஏ.எம்.ஏ.பரீட், ஹஸ்பர் ஏ ஹலீம்)

# ஆறு நூல்களின் வெளியீட்டு விழா

■ எம்.ஏ. றமீஸ்

பன்னூல் பெண் எழுத்தாளரும் ஓய்வு நிலை ஆசிரியையுமான எம்.ஐ.எம்.மதீனா உம்மாஹ், 06 மாதங்களில் எழுதிய 06 நூல்களின் வெளியீட்டு விழா, அக்கரைப்பற்று மாநகர சபை கேட்போர்கூடத்தில், ஞாயிற்றுக்கிழமை (30) காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளன.


சம்மாந்துறை பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.ஸ.அஹமட் கியாஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வின்போது, கிழக்கு மாகாண கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் எஸ்.நவநீதன் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ளவுள்ளார். மானிட சமூகவியல் படிப்பினைகள், இரம்மியமான வீடு, சித்திர வேலைப்பாடு உள்ளிட்ட மாணவர்களுக்கான சிங்களம், ஆங்கில நூல்கள் அடங்கலாக மனித வாழ்வின் சமூக சமய கலாசார விழுமியங்கள் போன்றவற்றை நேரிய வழியில் வழிப்பட வைக்கும் ஆறு நூல்களே இதன்போது வெளியிட்டு வைக்கப்படவுள்ளன.

சீமெந்துத் தளத்தில் சிக்குண்டு

# கூலித் தொழிலாளி பலி

■ என். ராஜ், எஸ். நிதர்ஷன், எம். றொசாந்த்

சுன்னாகம் - அம்பனைப் பகுதியில், நேற்று முன்தினம் (25), வீடு திருத்தவேலையில் ஈடுபட்டிருந்த கூலித் தொழிலாளி ஒருவர், கூரை சீமெந்துத் தளம்



சரிந்து வீழ்ந்ததில் உயிரிழந்துள்ளார்.

நவாலி - கலையரசி ஒழுங்கையைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான அல்ரர் போல் (வயது 42) என்பவரே, இவ்வாறு உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை, சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நல்லூர் கோவிலில் விசேட வழிபாடு

■ என். ராஜ்



பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினரின் 36ஆவது நினைவு தினத்தை முன்னிட்டும் யுத்த காலத்தில் அதிரடிப் படையிலிருந்து உயிரிழந்த வீரர்களை நினைவு கூர்ந்தும், காயமடைந்து தற்பொழுதும் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு ஆசி வேண்டியும், நல்லூர் கந்தசுவாமி கோவிலில், நேற்று (26) விசேட வழிபாடு நடைபெற்றது.

இதில், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொலிஸ் அத்தியட்சகர் ஹெட்டியாராச்சி, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அபயகோன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, முல்லைதீவு - வற்றாப்பளை அம்மன் கோவில், மடு தேவாலயம், திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய கோவில்களிலும் வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

வழிபாடுகளின் நிறைவில், தானம் வழங்கும் நிகழ்வும் நடைபெற்றது.

1983ஆம் ஆண்டு, பொலிஸ் சிறப்பு அதிரடிப் படை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் கடமையின் போது 467 பேர் உயிரிழந்துள்ளனர். 1986ஆம் ஆண்டு மார்ச் 3ஆம் திகதியன்று, யாழ்ப்பாணம் - திக்கம் பகுதியில், தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில், நான்கு சிறப்பு அதிரடிப் படையினர் கொல்லப்பட்டனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்களை நினைவுகூரும் தினம், செப்டெம்பர் 1ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



யாழ். பல்கலைக்கழக

# பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் போராட்டம்

■ என். ராஜ், எஸ். நிதர்ஷன், எம்.றொசாந்த்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் கூட்டுறவு தொழிற்சங்கத்துக்கெதிராக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால், பல்கலைக்கழக வளாகத்தில், நேற்று (26) காலை கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

கொரோனா வைரஸ் காலத்தில் இடம்பெற்ற களவுகள் தொடர்பில் தம் மீது பழி சுமத்தப்பட்டமைக்கும் உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று தொழிற்சங்கம் கோரிக்கை விடுக்கப்பட்டதற்கும் எதிர்ப்புத் தெரிவித்தே, இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எனினும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுவோரைத் தவிர ஏனைய அனைவரும் இந்தக் கவனயீர்ப்புப் போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ‘நீதிப் போராட்டத்தை ஆதரிப்போம்’

■ எம். றொசாந்த்

தமிழர் பகுதிகளில் காணாமல் ஆக்கப்பட்டோர்களது உறவுகள், ஞாயிற்றுக்கிழமை (30) முன்னெடுக்கும் நீதிப் போராட்டத்தை ஆதரிப்போம் என்று இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “இம்மாதம் 30ஆம் திகதி சர்வதேச அளவில் காணாமல் ஆக்கப்பட்டோர் நீதி கோரும் நாளாகும். இலங்கையிலும் போர்க் காலத்தில் தம் உறவுகள் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் உண்மையைக் கண்டறியாமல் துன்பத்தோடு, ஜனநாயக வழிகளில் நீதிகோரிப் பல ஆண்டுகளாய் போராடிக் கொண்டிருக்கும் உறவுகளோடு, நாமும் நீதி கோரி நிற்போம்; செயற்படுவோம்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

# இளைஞனைக் கடத்தி வாள்வெட்டு

■ எஸ், நிதர்ஷன், என். ராஜ்

தென்மராட்சி - வரணி, இயற்றாலை பகுதியில், நேற்று முன்தினம் (25) மாலை, இளைஞன் ஒருவர் வாள்வெட்டுக்கு இலக்காகிய நிலையில், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவரின் மகனே, இவ்வாறு வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.

வேலைக்குச் சென்றுவிட்டு பஸ்ஸில் வீடு திரும்பும் போது, சுட்டிபுரம் பகுதியில் 10 பேர் கொண்ட இனந்தெரியாத கும்பல் ஒன்று, பஸ்ஸை வழிமறித்து, அவ்விளைஞனைக் கடத்திச் சென்று, வாளால் வெட்டி விட்டுத் தப்பிச்சென்றுள்ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த இளைஞன், ஆபத்தான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில், கொடிகாமம் பொலிஸாரும் இராணுவத்தினரும் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ஐ. அமெரிக்கா

கறுப்பினத்தவரைப் பொலிஸார் சுட்டது தொடர்பில் விஸ்கோஸினில்

# 3ஆவது இரவாக அமைதியின்மை




ஐக்கிய அமெரிக்காவின் விஸ்கோஸினின் கெனோஷா நகரத்தில் மூன்றாவது இரவாக சிவில் அமைதியின்மை தொடர்பில் ஆர்ப்பாட்டக்காரர்களும் அதிகாரிகளும் மோதிய நிலையில், அங்கு பொலிஸாரால் சுடப்பட்ட கறுப்பினத்தவர் முடமாகியுள்ளதாகவும் அவர் உயிருக்காகப் போராடுவதாகவும் அவரது குடும்பமும் வழக்கறிஞர்களும் நேற்று முன்தினம் தெரிவித்துள்ளனர்.

நீதிமன்ற அறையொன்றுக்கு வெளியே, அதனுடன் இணைந்த கெனோஷாவிலுள்ள பூங்காவில் பகல்நேர ஊரடங்கினை மீறிய 300 தொடக்கம் 400 வரையான ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பொலிஸார் மோதிய நிலையில் கலகமடக்கு உடையிலிருந்த பொலிஸார், இறப்பர் குண்டுகளையும் கண்ணீர்ப்புகையையும் பிரயோகித்திருந்தனர். இதுதவிர, போத்தல்கள், தடிகள், வாணங்கள், ஏனைய பொருள்களைப் பொலிஸாரின் மீது திருப்பி எறிந்த பெரும்பாலானோரைக் கொண்ட சனத்திரள் மீது கண்ணீர்ப்புகைப் பிரயோகத்தை கெனோஷா கவுண்டி ஷெரிஃப் திணைக்கள நான்கு ஆயுதந்தரித்த கவச வாகனங்களும் மேற்கொண்டிருந்தன. இந்நிலையில், அவசரகாலநிலையை குறித்த மோதல்களுக்கு முன்னால் பிறப்பித்திருந்த விஸ்கோஸின் ஆளுநர் டொனி எவெர்ஸ், மேலதிக தேசிய காவலர் படைகளைத் தரையிறக்க எதிர்பார்த்துள்ளார். மேற்குறிப்பிட்ட கறுப்பினத்தவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை அவருக்கு அருகிலிருந்து பொலிஸாரால், அவர்களிலிருந்து விலகிச் செல்ல முற்பட்டபோது சுடப்பட்டிருந்தார்.

இஸ்ரேல்

லெபனானிலுள்ள ஹிஸ்புல்லாவின் இலக்குகளை

# 'இஸ்ரேல் தாக்கியது'




லெபனானிலிருந்து இஸ்ரேலியப் படைகளை நோக்கி துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதைத் தொடர்ந்து, லெபனானிய ஷியாக் குழுவான ஹிஸ்புல்லாவுக்குச் சொந்தமான நிலைகளை இஸ்ரேலிய விமானம் நேற்று அதிகாலை தாக்கியதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்துள்ளது.

துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதில் எந்தவொரு இஸ்ரேலியப் படைகளும் காயமடையவில்லை என இஸ்ரேலிய இராணுவம் கூறியுள்ளதுடன், முன்னரங்கின் லெபனானியப் பக்கத்திலிருந்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்படையடுத்து வெளிச்சக் குண்டுகள், புகை ஷெல்கள், துப்பாக்கி வேட்டுக்களை படைவீரர்கள் தீர்த்ததாகக் குறிப்பிட்டுள்ளது.

புதுடில்லி

# முகர்ஜியின் சிறுநீரக செயல்பாடுகளில் மாற்றம்



முன்னாள் குடியரசுத் தலைவர்பிரணாப் முகர்ஜி (வயது 84) ஆழ்ந்த கோமாவில் இருப்பதாகவும் சிறுநீரக செயற்பாடுகளில் லேசான மாற்றம் ஏற்பட்டிருப்பதாகவும், இராணுவ மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

உடல்நலக் குறைவு காரணமாக, புதுடில்லியில் உள்ள இராணுவ மருத்துவமனையில் கடந்த 10 ஆம் திகதி பிரணாப் முகர்ஜி அனுமதிக்கப்பட்டார். மூளையில் உறைந்திருந்த இரத்தக் கட்டி, அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றப்பட்டது. அறுவை சிகிச்சைக்குப் பிறகு அவர், ஆழ்ந்த மயக்க நிலைக்கு (கோமா) சென்றார். இராணுவ மருத்துவமனையில் அவர் சிகிச்சைக்காக சேர்ப்பக்கப்பட்டபோது, பிரணாபுக்கு கொரோனா தொற்று இருந்தது உறுதியானது.

இந்த நிலையில், அவரது நுரையீரலில் தொற்று பாதிப்பு ஏற்பட்டு அதற்கும் சிகிச்சை அளிக்கப்பட்டது. நேற்று முதல் அவரது சிறுநீரக செயற்பாடுகளில் லேசான மாறுபாடு ஏற்பட்டுள்ளது. அவர் தொடர்ந்து ஆழ்ந்த மயக்கநிலையில், செயற்கை சுவாசக் கருவியின் உதவியோடு சிகிச்சைப்பெற்று வருவதாக இராணுவ மருத்துவமனை தெரிவித்துள்ளது.



# பார்சிலோனாவிலிருந்து வெளியேறுகிறார் மெஸ்ஸி

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவிலிருந்து இப்பருவகாலத்தில் வெளியேறும் கோரிக்கை யொன்றை அக்கழகத்தின் அணித்தலைவரான லியனல் மெஸ்ஸி முன்வைத்துள்ளார்.

உடனடியாக அமலுக்கு வரும் வகையில் தான் பார்சிலோனாவிலிருந்து எத்தொகையுமில்லாமல் வெளியேறும் தனது ஒப்பந்தத்திலுள்ள சரத்தை செயற்படுத்த விரும்புவதாக பார்சிலோனாவுக்கு நேற்று முன்தினம் தொலைநகலொன்றை அக்கழகத்தின் முன்களவீரரான லியனல் மெஸ்ஸி அனுப்பியுள்ளார்.

> **"உடனடியாக அமலுக்கு வரும் வகையில் தான் பார்சிலோனாவிலிருந்து எத்தொகையுமில்லாமல் வெளியேறும் தனது ஒப்பந்தத்திலுள்ள சரத்தை செயற்படுத்த விரும்புவதாக தொலைநகலொன்றை அனுப்பியுள்ளார்**

இந்நிலையில், குறித்த சரத்தானது காலாவதியாகியுள்ளதாகவும் பார்சிலோனாவுடன் 700 மில்லியன் யூரோக்கள் வெளியேறும் தொகையுடன் அடுத்தாண்டு வரையில் 33 வயதான லியனல் மெஸ்ஸி ஒப்பந்தத்தைக் கொண்டுள்ளதாக பார்சிலோனா நம்புகின்றது.

அந்தவகையில், பார்சிலோனாவின் பணிப்பாளர் சபையானது விரைவில் கூடவுள்ளதுடன், பார்சிலோனாவின் தலைவர் ஜொஸெப் மரியா பார்தோமு இராஜினாமா செய்வதே லியனல் மெஸ்ஸியை சமாதானப்படுத்தும் என சிலர் கருதுகின்றனர்.

எவ்வாறாயினும் பார்சிலோனாவிலிருந்து வெளியேறுவதில் லியனல் மெஸ்ஸி உறுதியாயுள்ளதாகக் கூறப்படுகிறது.

வேகப்பந்து வீச்சாளரான ஜேம்ஸ் அன்டர்சன்

# டெஸ்ட்களில் 600 விக்கெட் கைப்பற்றி சாதனை



டெஸ்ட் போட்டிகளில் 600 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய முதலாவது வேகப்பந்துவீச்சாளராக இங்கிலாந்தின் ஜேம்ஸ் அன்டர்சன் மாறியுள்ளார்.

இங்கிலாந்து, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில், செளதாம்டனில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பித்து நேற்று முன்தினம் முடிவடைந்த மூன்றாவது டெஸ்டின் நேற்று முன்தின ஐந்தாவது நாள் ஆட்டத்தின்போது பாகிஸ்தான் அணியின் இரண்டாவது இனிங்ஸில் அவ்வணியின் தலைவர் அஸார் அலியின் விக்கெட்டைக் கைப்பற்றியபோதே 38 வயதான ஜேம்ஸ் அன்டர்சன் மேற்குறித்த மைற்கல்லை அடைந்தார்.

உடனடிச் செய்திகளைத் தமிழ் மொழியில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணைந்திருங்கள்

தமிழ்Mirror www.tamilmirror.lk

பதிவு செய்வதற்கு

Dialog
Type
ACT TM
and send to
87798
Daily Rs.1/=+TAX

HUTCH
Type
TM
and send to
2233
Monthly Rs.30/=+ TAX

Mobitel
Type
REG TM
and send to
77012
Daily Rs.1/=+TAX




* Terms and conditions apply

# சமச்சீரற்ற அதிகாரம் கோரும் மங்கள சமரவீர...

வெள்ளை யானை என வர்ணிக்கப்படும் மாகாணசபை முறைமை இல்லாமல் செய்வதென்றால், வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு 'சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வு' அவசியம் என்பதை, முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர வலியுறுத்தியிருக்கிறார். 'ஒரே நாடு - ஒரே சட்டம்' என்ற தனது கொள்கையைத் தற்போதைய அரசாங்கம் பகிரங்கமாகச் சொல்லியிருக்கும் இத்தருணத்தில், 'சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வு' என்பதை மங்கள வலியுறுத்தியிருப்பது கவனிக்கத்தக்கது.

தற்போதைய அரசாங்கத்தின் கொள்கையின் பிரகாரம், சிறுபான்மைச் சமூகங்களுக்குக் கொஞ்சமேனும் கிடைத்திருக்கின்ற அதிகாரங்களை இல்லாமல் செய்வதுதான் நோக்கம் என்பதை வெளிப்படையாகவே உணரமுடிகிறது. ஏற்கெனவே, கிழக்கு மாகாண தொல்லியல் பகுதிகளைப் பாதுகாக்கும் குழுவில் எந்தவொரு சிறுபான்மைப் பிரதிநிதித்துவமும் உள்வாங்கப்படவில்லை. 'அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சிக்குப் பலன்' என்ற செய்திக்கும் பலனில்லாமல் போயிருக்கிறது. டக்ளஸுக்கு வழங்கிய வாக்குறுதியைக்கூட அரசாங்கம் காப்பாற்றவில்லை என்பது கவனிப்புக்குரியது.

இத்தகைய நிலையில், நாடாளுமன்றத் தேர்தல்களின்போது ஐந்து சதவீதத்துக்கும் குறைவான வாக்குகளைப் பெறுகின்ற கட்சிகள் அல்லது சுயேச்சைக் குழுக்கள் நீக்கப்படுவதை எட்டு சதவீதமாக அதிகரிக்க உத்தேசித்திருப்பதாகவும் அறியமுடிகிறது. இதனால், எந்தவொரு சிறுபான்மைக் கட்சிகளும் தனித்துப் போட்டியிடமுடியாத நிலைமை உருவாகக்கூடும். பெருங்கட்சிகளின் தயவில் சிறுபான்மைக் கட்சிகள் இருக்க வேண்டும் என்பதே இதன் உள்ளர்த்தமாகும்.

நிலைமை இப்படித் தொடர்கையில், சிறுபான்மை மக்கள் அதிகம் வாழ்கின்ற வடக்கு - கிழக்குக்கு இருக்கின்ற ஓரளவு சந்தோஷப்படக்கூடிய மாகாணசபை முறைமையை, இல்லாதொழிக்க எத்தனிப்பது ஏற்புடையதல்ல. ஏனைய மாகாணங்களைப் போலன்றி, வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு வலுவானதொரு பிணைப்பிருக்கிறது. அப்பிணைப்பை இல்லாதொழிப்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. அதனால்தான், மங்கள சமரவீர சொல்லியிருப்பதுபோல், சமச்சீரற்ற அதிகாரப்பகிர்வு அவசியமாகிறது.

அனைத்து மாகாணங்களுக்கும் இருப்பதுபோல், சமமான அதிகாரங்களை வடக்கு - கிழக்கில் அனுபவிக்கமுடியாது. அதனால்தான் இங்கிலாந்து, கனடா போன்ற பெருநாடுகளில்கூட சிறப்பு அதிகாரத்துடன் தேசங்கள் இயங்குகின்றன. அதனடிப்படையில், சமச்சீரற்ற அதிகாரப் பகிர்வு வழங்கப்படுமாக இருந்தால், 'வெள்ளை யானை' என வர்ணிக்கப்படும் மாகாணசபை முறைமையை இல்லாதொழிப்பதுபற்றி, அரசாங்கம் சிந்திக்க முடியும். அதைவிடுத்து, ஒடுக்க நினைப்பது ஏற்புடையதல்ல.

தமிழ்Mirror
NO 8. HUNUPITIYA CROSS ROAD, COLOMBO 2. P.O. BOX 1136
EDITORIAL:
TEL: 011 2 479 372-6, 011 2 479 479 (EX.375)
FAX: 011 2 304 114
MARKETING MANAGER (DIR.) 011 2 479 822, 077 3421 476
CIRCULATION MANAGER (DIR.) 2 479 672, 077 3 219 775,
SUBSCRIPTION MANAGER (DIR.) 2 479 626, 2 479 628, 077 3 502 183
E-MAIL: tamilmirror@wijeya.lk


## தமிழ்மிரருக்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகையில் வெளியாகும் ஆக்கங்கள் தொடர்பான உங்களது கருத்துக்களையும் விமர்சனங்களையும் வரவேற்கிறோம். அத்துடன், உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு அறியத்தரலாம். மேலும், உங்கள் பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் நீங்கள் எங்களுக்கு எழுதி அனுப்பி வைக்கலாம். அவை உரிய காலத்தில் பிரசுரிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
இலக்கம் 8, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு – 02.
தொலைபேசி – 011-2479372-6
தொலைநகல் – 0112304114
மின்னஞ்சல் – tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

காதலுக்கும் ஊடலுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. சொல்லப்போனால், ஊடல் கூட, காதலின் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கான, இயற்கையான ஈர்ப்பின் ஒரு வடிவம்தான்.

அதீத அன்பின் வெளிப்பாட்டால், செல்லக் கோபம் வருவது இயற்கையாகும். இந்தக் கோபம் கூட, அவரவரின் உரிமையுடன் இணைந்தது என்பதை, இருவரும் உணர்ந்திருப்பார்கள்.

ஊடல் நீடித்தால், அது சுவாரஸ்யமாக இருக்காது. செல்லக் கோபம் வளர்ந்துவிடக் கூடாது. தங்களின் போலியான நடிப்பை, தம்பதியினர் விட்டுவிடுவதே சிறந்தது. மனம், எதையும் மாறுபாடாகவே சிந்திக்கும். தவறான நடத்தையைக் கூட, அர்த்தமுள்ள செயலாக எண்ணவைக்கும்.

எந்தச் சந்தர்ப்பத்திலும், கேலிக்காகக்கூட மனத்தை நோகடிக்கக் கூடாது. காதலை வளர்ப்பதையே இதயம் எப்போதும் விரும்புகின்றது. முதுமை நிலையிலும் காதலும் ஊடலும் தொடர்ந்து, இதயங்களின் இணைப்பை உறுதிசெய்கின்றன.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## தமிழரசுக் கட்சியின் சீரழிவும் தோல்வியும்



புருஜோத்தமன் தங்கமயில்

தேர்தல் அரசியல் என்பது 'பரமபத' (ஏணியும் பாம்பும்) விளையாட்டுப் போன்றது. வெற்றிகளை நினைத்த மாத்திரத்தில் அடைந்துவிட முடியாது. எதிர்க்கட்சிகளும் எதிர்த்தரப்புகளும் தோல்விகளைப் பரிசளிப்பதற்காகப் 'பாம்பு'களாகக் காத்துக் கொண்டிருக்கும்.

இப்படியான அச்சுறுத்தலுள்ள தேர்தல் அரசியல் களத்தில் இம்முறை, சொந்தக் கட்சிக்குள்ளேயே 'பரமபதம்' ஆடி, தமிழரசுக் கட்சி தோற்றுப் போயிருக்கின்றது. கட்சியின் தலைவர், செயலாளர் தொடங்கி, கடந்த நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்த பலரும், இந்தப் பொதுத் தேர்தலில் படுமோசமாகத் தோற்றிருக்கிறார்கள்.

இந்த நிலையில்தான், தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் 29ஆம் திகதி சனிக்கிழமை, வவுனியாவில் நடைபெற இருக்கின்றது.

தேர்தல் தோல்வி, தேசியபட்டியல் உறுப்பினர் நியமனச் சர்ச்சை, சொந்தக் கட்சி வேட்பாளர்களுக்கு எதிராகவே நிகழ்த்தப்பட்ட பிரசாரங்கள் உள்ளிட்ட விடயங்கள், மத்திய குழுக் கூட்டத்தில் சூடான வாதங்களுக்கு வித்திடும்.

அத்தோடு, இனிவரும் காலங்களில் தமிழரசுக் கட்சி, யாரின் அதிகார வளையத்துக்குள் சென்று சேரப்போகின்றது என்பதற்கான சில ஏற்பாடுகளையும் செய்யக்கூடும்.

தமிழ்த் தேசிய அரசியலில், ஒரு கட்சிக்குரிய கட்டமைப்பு சார் அடையாளத்தைத் தமிழரசுக் கட்சி ஓரளவுக்கு பேணி வந்திருக்கின்றது. தொகுதிக் கிளை தொடக்கம் மாவட்டக் கிளை, வாலிபர் முன்னணி, மத்திய குழு, வேட்பாளர் நியமனக் குழு, அரசியல் குழு என்றெல்லாம் அந்தக் கட்சி தன்னுடைய கட்டமைப்பைப் பேணுகின்றது.

ஆனால், அந்தக் கட்சி உண்மையிலேயே கட்சிக்குரிய கட்டமைப்பு மற்றும் அதன் அதிகார வரம்புகள் தொடர்பில், தெளிவான வரையறைகளைக் கொண்டிருக்கின்றதா என்றால், "இல்லை" என்பதே பதில் ஆகும்.

ஓர் அரசியல் கட்சியின் எந்தவொரு தீர்மானத்தையும் கட்சிக்குள் ஜனநாயக முறைப்படி விவாதிக்கப்பட்டே எடுக்கப்பட வேண்டும். ஒரு தீர்மானம் எடுக்கப்பட்ட பின்னர், அந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டு ஒழுகுவதுதான் அடிப்படைப் பண்பு.

ஆனால், தமிழரசுக் கட்சியையும் அதன் தீர்மானங்களையும் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்கள், முக்கியஸ்தர்கள் பொது வெளியில் விமர்சித்த அளவுக்கு, யாரும் இதுவரை விமர்சித்து இருக்கவில்லை.

பொதுத் தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்த அன்று இரவு, யாழ். மத்திய கல்லூரி வளாகத்தில் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி முக்கியஸ்தர்களாகத் தங்களை முன்னிறுத்தும் நபர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் கட்சியின் வெற்றி வேட்பாளர் சிவஞானம் சிறீதரன், கட்சியின் துணைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் உள்ளிட்டவர்களை நோக்கி நடத்திய தூசண வசைகளை, நூற்றுக்கணக்கான 'பேஸ்புக்' நேரடிக் காட்சிகள் ஒளிபரப்பின.

தேர்தல் தோல்வி உள்ளிட்ட கட்சியின் பின்னடைவுகளுக்கான காரணங்களை, நியாயமான முறையில் தேடுவதற்கான புத்தியுள்ள தொண்டர்களையும் தலைவர்களையும் கொண்டிருக்காத கட்சியொன்று, என்றைக்குமே மீண்டெழாது.

ஆனால், தேர்தல் காலத்திலும், அதன் பின்னரும் பொதுவெளியில் ரவுடிக் கூட்டங்களால் நிரம்பி இருக்கின்ற கட்சிக்குரிய காட்சிகளைத் தமிழரசுக் கட்சி பிரதிபலித்தது. (அதற்கான ஆதாரங்களை, அந்தக் கட்சியின் வேட்பாளர்களே சேகரித்து, கட்சியின் தலைமையிடம் கையளித்திருப்பதாகத் தெரிகின்றது.) இப்படியான நிலைமைகளை, தமிழரசுக் கட்சியும் அதன் தலைமையும் கட்டி வளர்த்திருக்கின்றது என்பதே, அதன் இன்றைய நிலைக்கு நல்ல உதாரணங்களாகும்.

பங்காளிக் கட்சிகளைக் கிஞ்சித்தும் மதிக்காது, கூட்டமைப்புக்குள் தனியாவர்த்தனம் நடத்துவதிலேயே தமிழரசுக் கட்சி, கடந்த 11 ஆண்டுகளாகக் கவனம் செலுத்தி வந்திருக்கின்றது. அந்தத் தனியாவர்த்தனம் என்பது, 'தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன்' என்ற மனநிலையை ஒத்ததாகும். அதுதான், அந்தக் கட்சியின் அனைத்துக் கட்டமைப்புகளுக்கு உள்ளேயும் விரவிப் படர்ந்திருக்கின்றது.

உட்கட்சி ஜனநாயகம் என்பதற்கும், கட்சியின் தீர்மானங்களைப் பொதுவெளியில் கேள்விக்கு உட்படுத்தும் நிலைக்குமான வித்தியாசங்களைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் தொடங்கி, அடிமட்டத் தொண்டன் வரை கற்றுத் தெளிய வேண்டியிருக்கின்றது.

இவ்வாறான நிலைகள் தொடர்பில் விமர்சனத்தை முன்வைத்ததும், "எங்களின் சொந்தக் கட்சி விவகாரங்களை நாங்களே பார்த்துக் கொள்வோம். அதுபற்றி மற்றவர்கள் (மக்கள், ஊடகவியலாளர்கள், விமர்சகர்கள் உள்ளிட்ட தரப்புகள்) கவலை கொள்ளத் தேவையில்லை" என்கிற வார்த்தைகளைத் உதிர்த்துக் கொண்டு, தமிழரசுக் கட்சிக்காரர்கள் வருவார்கள்.

ஓர் அரசியல் கட்சி என்பது, மக்களுக்கானது என்கிற அடிப்படையை, முதலில் புரிந்து கொள்ள வேண்டும். மக்களை ஆதாரமாகக் கொள்ளாத யாரும், எந்தத் தரப்பும் எந்தக் கட்சியும் மேலெழ முடியாது.

அப்படியான நிலையில், ஒரு கட்சியின் தோல்வி என்பது, பல நேரங்களில் அந்தக் கட்சியை நம்பி வாக்களித்த மக்களை மாத்திரமல்ல, ஒட்டுமொத்த மக்கள் கூட்டத்தையும் தோற்கடித்துவிடும்.

இப்படியான நிலையில், தமிழரசுக் கட்சி போன்ற ஒரு கட்சிக்கான கடப்பாடு என்பது, ஒவ்வொரு தமிழ் மகனிடமும் மகளிடமும் பதில் சொல்லியாக வேண்டிய அளவுக்கு இருக்கின்றது. இந்தக் கடப்பாட்டை, அடிப்படையில் இருந்து தமிழரசுக் கட்சி பேண வேண்டும்.

இத்தகைய கடப்பாட்டை, ஓர் அரசியல் கட்சி, ஓர் அரசியல் நெறியாகப் பேணாது, 'தண்டல்காரன்' மனநிலையைப் பேணிக் கொண்டிருப்பதானது, அந்தக் கட்சியை மண்ணோடு மண்ணாகச் சேர்த்து, அழித்துவிடும்.

இம்முறை தேர்தலில், கூட்டமைப்பின் தோல்வி என்பது, பெரும்பாலும் தமிழரசுக் கட்சியாலேயே நிகழ்த்திருக்கின்றது. கட்சியின் தலைவர் தொடங்கி, அடிமட்டத் தொண்டன் வரை, கட்சியின் வெற்றிக்காக உழைத்ததைக் காட்டிலும், சொந்தக் கட்சிக்கு உள்ளேயே மற்ற வேட்பாளர்களைத் தோற்கடிப்பதிலேயே ஆர்வம் காட்டினார்கள்.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் போன்ற, தமிழ் மக்களின் அடர்த்தி 97 சதவீதத்துக்கும் அதிகமுள்ள மாவட்டத்தில் போட்டியிட்டு, கட்சியின் தலைவர் வெற்றிபெற முடியவில்லை என்பது, தமிழரசுக் கட்சியின் மோசமான தோல்வியின் நிலையைக் காட்டுகின்றது.

மாவை சேனாதிராஜா, இந்தத் தேர்தலில் போட்டியிட்டிருக்க வேண்டுமா இல்லையா என்பதெல்லாம், விவாதிக்கப்பட வேண்டியதுதான். ஆனால், அவர் வேட்பாளராக முன்னிறுத்தப்பட்டதும் அவரின் வெற்றி குறித்து, அந்தக் கட்சியின் உறுப்பினர்கள் ஆர்வம் கொண்டிருக்க வேண்டும்.

கட்சியொன்றின் தலைமை தோற்பது என்பது, தம்முடைய தோல்வியாகவே அந்தக் கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் சிந்திக்க வேண்டும். ஆனால், தமிழரசுக் கட்சிக்குள், இவ்வாறான நிலையொன்று எந்தவொரு தருணத்திலும் உருவாக்கப்படவும் இல்லை; பேணப்படவும் இல்லை. குழும மனநிலை மேழுந்திருந்தது.

தேர்தல் காலத்தில், கட்சித் தலைவருக்குரிய பண்புகளை அதிக தருணங்களில் மறந்து, விருப்பு வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காகக் குழும மனநிலைக்குள் சிக்கிக் கொண்டு, மாவையும் செயற்பட ஆரம்பித்தார்.

சொந்தக் கட்சி வேட்பாளர்களுக்கு எதிராகவே, கட்சியின் முக்கியஸ்தர்கள் வெளிப்படையாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று, அதிக தடவைகள் மாவையிடம் சுட்டிக்காட்டப்பட்ட போதிலும், அந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து, அவர் கருத்தில் எடுக்கவில்லை. மாறாக, அவ்வாறான செயற்பாடுகளை அவர் ஊக்குவித்தார்.

குறிப்பாக, கட்சியின் பொருளாளரான கனகசபாபதியும் யாழ்ப்பாண மாவட்ட வாலிபர் முன்னணி முக்கியஸ்தர் கலையமுதனும் (மாவையின் மகன்) எம்.ஏ. சுமந்திரன், சிறீதரன் போன்றவர்களுக்கு எதிராக, வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்யும் அளவுக்கு நிலைமை சென்றிருந்தது.

இந்த விடயம் தொடர்பில், அண்மையில் திருகோணமலையில் நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் சிறீதரனால், மாவைக்கு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகள் போன்று நூற்றுக்கணக்கான உதாரணங்கள் உண்டு.

தமிழரசுக் கட்சியின் தோல்விக்கான காரணங்களை ஆராயும் நோக்கில், குழுவொன்றை அமைப்பது தொடர்பில், மாவை கவனம் செலுத்தியுள்ளதாகத் தெரிகின்றது.

அத்தோடு, தேர்தல் காலத்தில் சொந்தக் கட்சி வேட்பாளர்களுக்கு எதிராகச் செயற்பட்டவர்கள் தொடர்பில், ஒளி, ஒலி ஆதாரங்கள் அடங்கிய அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளமை குறித்து, அரசியல் குழுக் கூட்டத்தில் சிறீதரன் பிரஸ்தாபித்துள்ளார்.

இந்தப் பின்னணியில், சுமந்திரனும் மாவையும் கூட, தங்களுடைய அறிக்கைகளை மத்திய குழுவில் சமர்ப்பிக்கவுள்ளனர். ஓர் அரசியல் கட்சியாக, அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதும் ஆராய்வதும் மாத்திரம், நிலைமைகளைச் சரி செய்யும் என்றில்லை.

மாறாக, விடயங்களை அதன் உண்மைத் தன்மைகளின் போக்கில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதுதான், எதிர்காலத் தோல்விகளைத் தவிர்ப்பதற்கான வழியாக இருக்க முடியும். இதனை விடுத்து, "பார்ப்போம் தம்பி" என்கிற மனநிலை என்பது, 'கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன' நிலையை ஏற்படுத்தி விடும். சொந்தத் தோல்வியில் இருந்தாவது, மாவை அதனைக் கற்றுக் கொள்ள வேண்டும்; அடுத்த கட்டங்களைக் குறித்துச் சிந்திக்க வேண்டும்.

வவுனியாவில் நடைபெறவுள்ள தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம், உண்மையான விடயங்கள் குறித்துக் கரிசனை கொள்வதைக் காட்டிலும், கட்சிக்குள் யாருக்கு ஆதரவுத் தளம் அதிகம் இருக்கின்றது என்பதை, நிரூபிக்கும் காட்சிகளை அரங்கேற்றப் போகின்றது. ஏனெனில், தமிழரசுக் கட்சியின் மத்திய குழுவுக்குள் யாருக்கு அதிக ஆதரவு இருக்கின்றது என்பது குறித்து, குழுக்களைச் சேர்க்கும் நடவடிக்கைகள் பரபரப்பாக இடம்பெற்று வருகின்றன.

தேர்தலில் வென்றவர்கள் ஓரணியிலும் தேர்தலில் தோல்வியுற்று 'அடிபட்ட பாம்பு'களாகக் காத்திருப்பவர்கள் மற்ற அணியிலும், கிட்டத்தட்ட இணைந்திருப்பதாகத் தெரிகின்றது. அது, கட்சியைச் சீரமைப்பதற்கான காட்சிகளாகத் தெரியவில்லை. மாறாக, இன்னும் இன்னும் சீரழிப்பதற்கான காட்சிகளாகவே விரிகின்றன.

## கடிதங்கள்

### குளத்துக்குள் கழிவுகள் கொட்டுவதை நிறுத்தவும்

பெரியநீலாவணை கமநலசேவை நிலையத்துக்கு உட்பட்ட வட்டிக்குளத்துக்குள், அதன் அருகில் இருக்கும் நெல் அரைக்கும் தொழிற்சாலையில் இருந்து கழிவுகள் கொட்டப்படுவதால், விவசாயிகள் இன்னல்களை அனுபவிக்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர சபை எல்லைக்குள் அமைந்துள்ள இக்குளத்தில், மாரிகாலத்தில் மழைநீரைச் சேகரித்து, ஜலபோகத்தில் விவசாய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில், கடந்த பல வருடங்களாக இக்குளத்துக்குள் நெல் அரைக்கும் ஆலையின் உமி, சாம்பல் என்பன குளத்துக்குள் கொட்டப்பட்டு வருகிறது. இதனால், விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படும் நீர் மாசடைவதுடன், வயல் நிலங்களுக்கு நீர்ப் பாய்ச்சுவதிலும் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளது.

அதேவேளை, இந்நீரை வயல்களுக்குள் பாய்ச்சுவதால், வயல் நிலங்களில் உவர்த் தன்மை அதிகரித்து வருவதாகவும் கொட்டப்படும் கழிவுகளால், குளம் நாளடைவில் நிரப்பி, நீரின் கொள்ளளவும் குறைவடைந்து, விவசாயத்துக்குத் தேவையான நீரைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலையும் உருவாகிவிடும் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு, கழிவுகள் கொட்டப்படுவது தொடர்பாக, உரிய அதிகாரிகளுக்குப் பலதடவை தெரியப்படுத்திய போதிலும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, குளத்துக்குள் கழிவுகளைக் கொட்டுவதை, அதிகாரிகள் தலையிட்டு உடனடியாக நிறுத்தவேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

–எஸ். சபேசன்

வாகன தொழிற்றுறை உட்பட

# ஆயிரக் கணக்கான தொழில்கள் ஆபத்தில்

## Ceylon Motor Traders Association (CMTA) தெரிவிப்பு





உள்நாட்டு இறக்குமதியாளர்கள் ஊடாக, வாகனத் தயாரிப்பாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கையின் ஒரேயொரு வர்த்தக அமைப்பான Ceylon Motor Traders Association (CMTA), வாகன இறக்குமதி மீதான இடைக்காலத் தடை நீடிக்கும் காலப்பகுதி தொடர்பில், தெளிவான பதிலை வழங்குமாறும் அரசாங்கத்தால் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட சட்டப்படியான இறக்குமதியாளர்களுக்கு வாகன இறக்குமதியை ஒழுங்குபடுத்த வேண்டியதன் தேவையையும் அரசாங்கத்திடம் வலியுறுத்தியுள்ளது.

CMTA வின் தலைவர், யசேந்திர அமரசிங்க தெரிவிக்கையில், "முக்கியமாக, இலங்கையில் கொவிட்-19 ஐக் கட்டுப்படுத்துவதற்கான அரசாங்கத்தின் தலைமைத்துவம், முயற்சிகளைப் பாராட்டுகின்றோம். எமது நிலைமை, ஏனைய பல உலக நாடுகளை விட மிகவும் சிறந்த நிலையில் உள்ளமைக்கு, அரசாங்கத்தின் நடவடிக்கைகளைப் பாராட்டுகின்றோம்.

"எவ்வாறாயினும், வாகன இறக்குமதித் தடையானது, ஆயிரக்கணக்கான இலங்கையர்களை மோசமாகப் பாதித்துள்ளது. மேலும், அது எப்போது நீக்கப்படும் என்பது குறித்து, எங்களுக்குத் தெளிவாகத் தெரிவிக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

"இதன் மூலம், வணிகங்களும் மக்களும் முன்னரே திட்டமிடுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இந்த இடைக்காலத் தடையை நீக்குவது தொடர்பில் மட்டுமல்லாமல், தொழிற்றுறையை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு செல்ல, முறையான விதிமுறைகளை அரசாங்கம் அறிமுகப்படுத்த வேண்டியது மற்றைய முக்கிய பிரச்சினையாகும்.

"இலங்கைக்கும் உலகெங்கிலும் உள்ள வாகன உற்பத்தியாளர்களுக்கும், இடையிலான பாலமாகச் செயற்படுவதன் மூலம், போக்குவரத்துத் துறையில் CMTA குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கின்றது.

"2019ஆம் ஆண்டில், CMTA இலங்கைக்கான எதிர்கால நகர்கைத் திட்டமொன்றை விவரிக்கும் கொள்கை பரிந்துரைகள் அடங்கிய ஆவணமொன்றை உருவாக்கத் தொடங்கியது. "இந்த முன்மொழிவை உருவாக்க CMTA சர்வதேச பிரயோக ஆராய்ச்சி நிறுவனங்கள், சர்வதேசப் பங்காளிகளுடன் இணைந்து செயற்படுகிறது. இது நிறைவடைந்ததும் சம்மேளனம் இதனை அரசாங்கத்திடம் முன்வைக்கும்" என்றார்.

CMTA ஆனது, உலகளாவிய வாகன வர்த்தக நாமங்களினது உரிமத்தைக் கொண்ட அனைவரையும் உள்ளடக்கியது. இவை கார்கள், வணிக நோக்கிலான வாகனங்கள், இரண்டு சக்கர வாகனங்கள், மூன்று சக்கர வாகனங்கள் உட்பட டயர்கள், உராய்வு நீக்கி எண்ணை ஆகியவற்றை இறக்குமதி செய்வதுடன், நேரடியாகவும் மறைமுகமாகவும் 20,000க்கும் மேற்பட்டோருக்கு வேலைவாய்ப்பை வழங்குகிறது. அத்துடன், நாடு முழுவதும் உட்கட்டமைப்பில் கணிசமான முதலீடுகளையும் மேற்கொண்டுள்ளது.

அனைத்து வாகன இறக்குமதியையும் முழுமையாக இடை நிறுத்தியமை, முழுத் தொழிலுக்கும் பெரும் சிரமத்தை ஏற்படுத்தியுள்ளது என்று சம்மேளனம் மீண்டும் வலியுறுத்துகிறது. இறக்குமதியை மீண்டும் தொடங்கத் திட்டமிடும் ஓர் உறுதியான காலக்கெடுவை வழங்குமாறு அது அரசாங்கத்திடம் கோருகிறது,

CMTA வின் தலைவர், யசேந்திர அமரசிங்க இது தொடரபில் மேலும் தெரிவிக்கையில், "எதிர்காலத்தில் தொடங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி பல மாதங்கள் ஆகுமெனில், தொழிற்றுறைக்கு ஆதரவை வழங்குமாறு அரசாங்கத்திடம் கோருகின்றோம். இதனால், இறக்குமதியாளர்கள் அதன் ஊழியர்களையும் பொதுச் செலவுகளையும் தக்க வைத்துக் கொள்ள முடியும்.

"ஏனெனில், விரைவில் கையிருப்புத் தீர்ந்து விடுமென்பதுடன், வாகன விற்பனை மூலம் எவ்வித வாகன விற்பனை வருமானமும் இருக்காது. பரஸ்பர சாத்தியமான எதிர்கால வழியை உருவாக்க முயற்சிக்க சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளுடன் ஆக்கபூர்வமான உரையாடலை நடத்த நாங்கள் மிகவும் விரும்புகிறோம்" என அமரசிங்க மேலும் குறிப்பிட்டார்.

CMTA நாட்டின் பொருளாதாரம், வெளிநாட்டு இருப்புகளை எதிர்கொள்ளும் சவால்களைப் புரிந்து கொண்டுள்ள அதேவேளை, அதன் உறுப்பினர்கள் தங்கள் சுமையின் பங்கை ஏற்றுக் கொண்டு, இதுவரை சம்பளக் குறைப்பு அல்லது ஆட்குறைப்புகளை மேற்கொள்ள தங்களால் முடிந்தவரை முயற்சி செய்கிறார்கள். உறுப்பு நிறுவனங்களும் அவற்றின் விநியோகஸ்தர்கள் திட்டமிடத் தெளிவான திசை எதுவும் இல்லாமையால், நீட்டிப்பதற்குக் கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதைத் தவிர வேறு வழி எதுவும் இல்லை.

மேலும், வாகன இறக்குமதிக்கான இடைக்காலத் தடை அமல்படுத்தப்பட்ட உடனேயே, தொழிற்றுறையின் தொடர்ச்சியை உறுதி செய்வதற்கான திட்டங்களை உருவாக்கும் பொருட்டு, இறக்குமதிக் கட்டுப்பாடுகள் எப்போது நீக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது என்பது குறித்து, தெளிவான தகவல்களைக் கோரி, அந்த அமைப்பு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குக் கடிதங்களைச் சமர்ப்பித்ததாகச் சம்மேளனம் தெரிவித்தது. துரதிர்ஷ்டவசமாக, இந்தக் கோரிக்கைகளுக்கு முறையான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

வாகன இறக்குமதியை ஒழுங்குபடுத்துவதற்கு அரசாங்கமும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று CMTA உறுதியாக நம்புகிறது. மோட்டார் வாகனங்களின் இறக்குமதியின் தரம், அளவைக் கட்டுப்படுத்த வாகன இறக்குமதியாளர்களை ஆராய்ந்து பதிவுசெய்யும் திட்டத்தை அரசாங்கம் செயற்படுத்த வேண்டும் என்று அது அறிவுறுத்துகிறது.

இது உலகெங்கிலும் உள்ள எல்லா நாடுகளிலும் பின்பற்றப்படும் ஒரு நடைமுறை என்பதுடன் நுகர்வோர், நம்பகமான கூட்டாண்மை நிறுவனத்திடமிருந்தே வாகனத்தை வாங்குகிறார்கள். மாறாக, நேர்மையற்ற இயக்குநர்களிடமிருந்து இல்லை என்ற உறுதிப்பாட்டை வழங்கும்.

இந்தச் சந்தர்ப்பத்தில், வாகன இறக்குமதியில் சுமார் 30% மட்டுமே தயாரிப்பாளரால் அங்கிகரிக்கப்பட்ட இறக்குமதியாளர்கள் மூலமாக இடம்பெறுகின்றது. இறக்குமதியாளர்களுக்கான விதிமுறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம், இலங்கை நுகர்வோரைப் பாதுகாக்கும் அதேவேளை, ஒட்டோமொபைல் துறையின் தரத்தை மேம்படுத்துவதோடு, வெளிநாட்டு நாணய வெளிப்பாய்ச்சலை அரசாங்கம் கணிசமாகக் குறைக்க முடியும் என்று CMTA நம்புகிறது.

இலங்கை Ceylon Motor Traders Association (CMTA), 100 ஆண்டுகளுக்கு முன் ஸ்தாபிக்கப்பட்டதுடன், இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் ஒன்றிணைக்கப்பட்ட துணை அமைப்பாக 1919 ஆம் ஆண்டு முதல் திகழ்கின்றது.

தமது தயாரிப்பாளரால் அங்கிகாரமளிக்கப்பட்ட இறக்குமதியாளரின் ஊடாக, இலங்கையில் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் அனைத்து சர்வதேச வர்த்தக நாமங்களுடனும் நேரடித் தொடர்பைக் கொண்ட ஒரேயொரு சம்மேளம் இதுவாகும்.

இப்பிராந்தியத்தில் மிக சிரேஷ்ட வாகன வர்த்தக சங்கம் இதுவாகும். CMTA உறுப்பினர்கள் கூட்டாக ஆயிரக்கணக்கான இலங்கையர்களைப் பணிக்கு அமர்த்தியுள்ளனர். அதேநேரத்தில் பொறியியல், முகாமைத்துவம் ஆகிய துறைகளில் சர்வதேச ரீதியாகக் கடைபிடிக்கப்படும் சிறந்த நடைமுறைகளை நாட்டுக்குக் கொண்டு வருகிறார்கள்.

மேலும், நன்கு பயிற்றப்பட்டதும் வெளிநாடுகளில் வேலை செய்யக்கூடியதுமான ஒரு தொழிற்படையை உருவாக்குகின்றது. CMTA உறுப்பினர்கள் அனைவரும் தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் தயாரிப்பாளரால் தணிக்கை செய்யப்படுகிறார்கள்.

மேலும், அவர்கள் இறக்குமதி செய்யும் வாகனங்கள் தயாரிப்பாளர்களிடமிருந்து முழு உத்தரவாதத்துடன் நேரடியாகத் தருவிக்கப்படுவதுடன், இதனால் இலங்கையர்கள், தங்கள் வாகனங்களின் தரம், இறக்குமதியாளரின் நம்பகத்தன்மை ஆகியவை குறித்து உறுதி செய்யப்படுகிறார்கள்.

## பங்குச் சந்தை

COLOMBO STOCK EXCHANGE

2020.08.26

அனைத்து பங்குகளின் விலைச்சுட்டெண்
**5,335.66**

S&P SL20 விலைச் சுட்டெண்
**2,364.91**

### நாளாந்த பங்குச் சந்தை நிலைவரம்



2020.08.26

TOP 10 விலை உயர்ந்த, சரிவடைந்த நிறுவனங்கள்

| விலை உயர்ந்த நிறுவனங்கள் | முன்னைய விலை | நேற்றைய விலை | மாற்றம் |
|---|---|---|---|
| பிடிஎல் | 140.00 | 150.70 | 10.70 |
| லங்கம் சிலோன் | 24.50 | 25.90 | 1.40 |
| டிமோ | 283.30 | 296.90 | 13.60 |
| டில்மா சிலோன் | 631.0 | 659.00 | 28.00 |
| ஏலியன்ஸ் | 39.40 | 41.10 | 1.70 |
| கார்கோ போட் | 42.00 | 43.80 | 1.80 |
| பைராஹா ஃபார்ம்ஸ் | 89.00 | 92.80 | 3.80 |
| கஹாவத்த | 33.70 | 35.10 | 1.40 |
| ரோயல் பல்ம்ஸ் | 13.90 | 14.30 | 0.40 |
| பீபள்ஸ் மேர்ச் | 7.80 | 8.00 | 0.20 |

| விலை சரிவடைந்த நிறுவனங்கள் | முன்னைய விலை | நேற்றைய விலை | மாற்றம் |
|---|---|---|---|
| ப்ளு டயமண்ட்ஸ் (சாதாரண) | 0.30 | 0.20 | (0.10) |
| நேஷன் லங்கா | 0.80 | 0.70 | (0.10) |
| முல்லர்ஸ் | 0.90 | 0.80 | (0.10) |
| டொல்பின் ஹொட்டல்ஸ் | 20.40 | 18.50 | (1.90) |
| டங்கரின் | 38.00 | 35.00 | (3.00) |
| எல் ஓ எல் சி ஹோல்டிங்ஸ் | 154.10 | 142.00 | (12.10) |
| மெக்வூட்ஸ் எனர்ஜி | 1.60 | 1.50 | (0.10) |
| ஒரியண்ட் பின். | 9.10 | 8.60 | (0.50) |
| எல்ஓஎல்சி பின் | 3.80 | 3.60 | (0.20) |
| மஹாவலி கொக்கனட் | 24.00 | 22.80 | (1.20) |

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

**TT RATES**
ISSUED BY: INTERNATIONAL OPERATIONS DEPARTMENT
DATE : 26 AUGUST 2020

| CURRENCY | BUYING RATE | SELLING RATE |
|---|---|---|
| Australian Dollar | 130.93 | 137.15 |
| Canadian Dollar | 138.30 | 144.32 |
| Chinese Yuan (Renminbi) | 25.65 | 27.76 |
| Euro | 216.49 | 224.09 |
| Japanese Yen | 1.71 | 1.78 |
| Singapore Dollar | 133.40 | 138.84 |
| Sterling Pound | 240.87 | 248.90 |
| Swiss Franc | 200.57 | 208.80 |
| US Dollar | 184.23 | 188.53 |

| COUNTRY | CURRENCY | INDICATIVE RATE |
|---|---|---|
| Bahrain | Bahrain Dinar | 493.72 |
| Kuwait | Kuwait Dinar | 608.74 |
| Oman | Oman Rial | 483.42 |
| Qatar | Qatar Riyal | 51.10 |
| Saudi Arabia | Saudi Arabian Riyal | 49.62 |
| UAE | UAE Dirham | 50.67 |

**சர்வதேச பெற்றோலிய பொருட்களின் விலை**

| சுத்திகரிக்கப்படாத எண்ணெய் | |
|---|---|
| பிரெண்ட் | 45.96 அமெ.டொ. / பீப்பாய் |
| ஒபெக் | 45.87 அமெ.டொ. / பீப்பாய் |

| சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகள் -சிங்கப்பூர் சந்தை | |
|---|---|
| பெற்றோல் | 48.50 அமெ.டொ. / பீப்பாய் |
| டீசல் | 47.73 அமெ.டொ./ பீப்பாய் |
| மண்ணெண்ணெய் | 43.81 அமெ.டொ. / பீப்பாய் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

**2020 ஓகஸ்ட் 26 இலுள்ளவாறான SLIBOR வீதங்கள்**

| | |
|---|---|
| மறு நாள் | 5.53 |
| 7 நாள்கள் | 5.92 |
| 1 மாதங்கள் | 6.05 |
| 3 மாதங்கள் | 6.96 |
| 6 மாதங்கள் | 7.61 |
| 12 மாதங்கள் | 8.50 |

# ஐரோப்பிய ஒன்றியத்தின் Erasmus+ புலமைப்பரிசில்கள்



இலங்கை மாணவர்களுக்குத் தமது கல்வி, விருத்திச் செயற்பாடுகளைத் தொடர்வதற்கான உதவிகள் வழங்குவதைத் தொடரும் வகையில், 13 மாணவர்களுக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் Erasmus+ இணை முதுமாணிப் பட்டப்படிப்புத் திட்டத்தின் கீழ் புலமைப்பரிசில் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழு அறிவித்துள்ளது.

இலங்கைச் சமூகங்களில் காணப்படும் பாரதுரமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய வகையிலும், மாணவர்களுக்கு அவசியமான அறிவை வழங்கி, வகுப்பறைச் சூழலிலிருந்து பணியிடச் சூழலுக்கு மாறிக் கொள்ள உதவியளிக்கும் வகையில், இந்தப் பட்டப்படிப்புத் திட்டம் அமைந்துள்ளது.

இந்தப் புலமைப்பரிசில் திட்டத்தில் காணப்படும் பிரத்தியேகமான உள்ளடக்கமாக, மாணவர்களுக்கு ஆகக்குறைந்தது இரு ஐரோப்பிய நாடுகளில், மூன்று பல்கலைக்கழகங்களில் உயர் கல்வியைத் தொடர்ந்து, இந்தப் பல்கலைக்கழகங்களிலிருந்து இணை பட்டப்படிப்பைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இந்த ஆண்டின் புலமைப்பரிசில் வழங்கல்களில், கற்கைகளின் பத்து பிரிவுகள் உள்ளவாங்கப்பட்டுள்ளன. இதில், ஐந்து ஐரோப்பிய நாடுகளான பெல்ஜியம், பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஐக்கிய இராட்சியம் போன்ற ஐந்து நாடுகளில், நகரம், காலநிலை, நிலைபேறாண்மை, வெப்பவலய உயிரியல் பரம்பல், சூழல்கட்டமைப்புகள், வெள்ள இடர் முகாமைத்துவம், கடல்வாழ் சூழல் போன்றன அடங்கியுள்ளன. புலமைப்பரிசில் வெற்றியாளர்கள் பொலொக்னா, பிரசல்ஸ், க்ளாஸ்கோ, போர்டெக்ஸ், ட்ரெஸ்டென் போன்ற ஐரோப்பிய நகரங்களில் காணப்படும் பல்கலைக்கழகங்களில் சர்வதேச பயிலல் சூழலில் கற்றல் அனுபவங்களைப் பெற்றுக் கொள்வார்கள்.

Erasmus+ இணை முதுமானிப் பட்டப்படிப்பு என்பது பெருமைக்குரிய சர்வதேச கற்கைத் திட்டமாக அமைந்துள்ளதுடன், உயர் கல்வி நிறுவனங்களின் சர்வதேச கூட்டமைப்பினூடாகத் தனிநபர்களுக்குக் கற்றல், நிதி வழங்கல் வசதியை வழங்குகின்றது. தனிநபர்களுக்கு அவசியமான திறன்களைப் பெற்றுக் கொள்வதற்கும், ஐரோப்பாவின் பல்வேறு முன்னணிப் பல்கலைக்கழகங்களிலிருந்து அவர்களின் திறன்களை ஊக்குவித்துக் கொள்வதற்கும் இந்தத் திட்டம் உதவியாக அமைந்துள்ளது.

## பண்புகள் மிக முக்கியம்

Biz Tips

**பிறரை தன்வயப்படுத்துதல்**

பிறரை தனது பொருளையோ, சேவையையோ வாங்க வைத்தல்,

நிதி உதவியோ அல்லது வேறு வகையான உதவியையோ தர சம்மதிக்க வைத்தல்

தனக்கு - தொழிலுக்கு சாதகமாக நடக்க வைத்தல்.

**செல்வாக்கு யுக்திகளை பயன்படுத்துதல்**

பலவிதமான யுக்திகளை பயன்படுத்தி பிறரை சாதகமாக நடக்க வைத்தல்,

புதிய தொழில் வாய்ப்புகளை உண்டாக்குதல், செல்வாக்கு மிக்க நபர்களை பயன்படுத்திக் கொள்ளுதல்

**தரத்துக்கான முனைப்பு**

தனது தொழிலில் தற்போதுள்ள தரத்தையோ அல்லது அதையும் விட மேம்பட்ட தரத்திலோ பொருளை-சேவையை தர முனைப்புடன் செயல்படுதல்,

தனது பொருளையும் மற்ற போட்டியாளர்களின் பொருளையும் ஒப்பிட்டு தரத்தை மேம்படுத்த எப்போதும் முயலுதல்.

**செயலை முடிக்க முனைப்பு**

எடுத்துக் கொண்ட செயலை சொந்த சௌகரியங்களையும் தியாகம் செய்து எப்பாடுப்பட்டாவது முடிக்க அரும்பாடு படல்.

செயலில் இறங்கும் போது ஏற்படும் பிரச்சனைகளுக்கு முழு பொறுப்பு எடுத்துக் கொள்ளல்.


வேலையாட்களோடு தோளோடு தோள் கொடுத்து நின்று செயலை முடித்தல்.

தொடரும்...

# சிறுத்தைப் பொறி

கவிதா சுப்ரமணியம்





**மனிதனுக்கு மாத்திரம் சொந்தமானது என்று பலராலும் நம்பப்படும் இந்தப் பூமியில், அனைத்து வகையான விலங்கினங்கள், தாவர இனங்கள், பூச்சி இனங்கள் போன்ற இதர உயிரினங்கள் அனைத்துக்கும் வாழ, சரி சமமான உரிமை உண்டு என்பதை, நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். வலிமையான இனம், வலிமை குறைந்த இனம் என உதாசீனப்படுத்துவது, அதன் உரிமைகளை மறுப்பது, சட்டப்படி குற்றமாகும். இவ்வாறு, வீடு உள்ளிட்ட காட்டு விலங்குகளைத் துன்புறுத்துவது, கொலை செய்வது போன்றவற்றுக்கான தண்டனை குறித்து, இலங்கை அரசமைப்பின் சட்டத்தைப் பற்றி நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.**

ஒரு விலங்கின் உணவு, நீர், இருப்பிடம், உடற்பயிற்சியை மறுப்பதோ, தனிநபரின் விருப்பத்துக்கு ஏற்ப, நீண்டகாலம் அடைத்து வைப்பது, கட்டி வைப்பது தண்டனைக்குரியது. காட்டு விலங்குகள் பாதுகாப்புச் சட்டத்தின்படி, காட்டு விலங்குகளை வளர்ப்பது, அவற்றைப் பொழுதுபோக்குப் பயன்பாட்டுக்காகப் பயிற்றுவிப்பது, விலங்குச் சண்டைக்கு ஏற்பாடு செய்வது, சிறைப்பிடித்தல், விஷமூட்டல், வேட்டையாடுதல் போன்ற அனைத்தும் இலங்கையில் தண்டனைக்குரிய குற்றங்களாகும். ஆனால், இலங்கையிலுள்ள பலரும், சட்டங்களைச் சரியான முறையில் அறிந்து வைத்திராமையும் அல்லது சட்டத்தை மதிக்காமையுமே, தற்போது மலையகத்தில் தொடர்ச்சியாக சிறுத்தைகள் உயிரிழந்து வருகின்றமைக்குப் பிரதான காரணமாகும் என்றால், அது மிகையாகாது.



காட்டு விலங்கு ஒன்றுக்குப் பொறி வைத்தல் என்பது, இலங்கை அரசமைப்பின் தாவர மற்றும் விலங்குகள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 30ஆம் பிரிவின் கீழ், தண்டனைக்குரிய குற்றமாகும். 2020ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம், 8 சிறுத்தைகள் இறந்துள்ளன. 2019ஆம் ஆண்டு முடியும் வரையான கடந்த ஐந்து ஆண்டுக் காலப்பகுதியில் மாத்திரம், சுமார் 32 சிறுத்தைகள் இறந்துள்ளனவென, தரவுகள் தெரிவிக்கின்றன. இந்த ஐந்து ஆண்டுகளுக்குள், ஹக்கல பகுதியிலேயே, மொத்தம் 17 சிறுத்தைகள், விஷ உணவு உட்கொண்டமையாலும் பன்றிப் பொறியில் சிக்கியும் இறந்துள்ளன.

சிறுத்தைகள் உயிரிழப்புக்கு மத்தியில், சமீபத்தில் கறுஞ்சிறுத்தையொன்றும் உயிரிழந்திருந்தது. கருஞ்சிறுத்தை இனம் என்பது, தனியான இனம் கிடையாது. இலங்கை, இந்திய நாடுகளில் குறைவாகக் காணப்படும் இந்தக் கருஞ்சிறுத்தையின் மரபணுவில் காணப்படும் மெலனின் அளவு அதிகமாக இருப்பதாலேயே, கரிய நிறத்துடன் காணப்படுகின்றன. இவை, அடர்ந்த இருண்ட காடுகளை அண்மித்த பகுதிகளிலேயே வசித்து வருகின்றன. கடந்த 10 ஆண்டுகளில், சில கருஞ்சிறுத்தைகள் இறந்த நிலையில் மீட்கப்பட்டிருந்தாலும், 2019ஆம் ஆண்டின் பிற்பகுதியில், சிவனொளிபாதமலை மலைக்காடுகளில் உள்ள நல்லதண்ணி பகுதியின் தோட்டப்புறத்தில், கருஞ்சிறுத்தையின் நடமாட்டம் தொடர்பாக கிடைத்த தகவலின் அடிப்படையில், வனவிலங்கு கால்நடை வைத்தியர்களான மாலக்க அபேரத்ன, மனோஜ் அக்கலங்கவால் ஆகியோர் இணைந்து, தானியங்கி புகைப்படக் கருவி மூலம், இந்த சிறுத்தையை படம் பிடித்திருந்தனர். இந்தச் சிறுத்தை, வாழைமலை தோட்டப்பகுதியில் பொறியில் சிக்குண்ட பின்னர், இவர்கள் இருவராலுமே சிகிச்சையும் அளிக்கப்பட்டு, பின்னர் சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்திருந்தது.

இறுதியாக, கண்டி, அம்பகஸ்தென்ன, தொலுவ பகுதியிலுள்ள தனியார்த் தோட்டமொன்றில், சிறுத்தையொன்று பொறியில் சிக்கி பலியாகியிருந்தது. இந்தச் சிறுத்தை, பொறியில் சிக்கியவுடன், வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்ட பின்னர், ஒன்றரை மணித்தியாலகத்தில் சம்பவ இடத்துக்கு வந்தபோதும், அந்தச் சிறுத்தை உயிரிழந்த நிலையிலேயே மீட்கப்பட்டது. வயிற்றில் பொறி சிக்கிக்கொண்டதால் ஏற்பட்ட நுரையீரல் செயலிழப்பு, முச்சுத் திணறல், உயிர் அழுத்தம் ஏற்பட்டமையாலேயே, சிறுத்தை உயிரிழந்துள்ளது என, உயிரிழந்த சிறுத்தையைப் பிரேத பரிசோதனை மேற்கொண்ட டொக்டர் தாரக்க பிரசாத் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இலங்கையில் சிறுத்தைகள் இறப்பதற்கு, பொறி வைப்பதே பிரதான காரணமாக அமைந்துள்ளது.

இலங்கைச் சிறுத்தை என்பது, “பந்ரா பார்டஸ் கொட்டியா” என்று அழைக்கப்படுகின்றது. இது, இலங்கையை தாயகமாகக் கொண்ட சிறுத்தைத் துணையினமாகும். வனவிலங்கு வர்த்தகம், மனித - சிறுத்தை முரண்பாடு என்பவற்றால், இதன் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து வருகின்றமையால், பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கம் இச்சிறுத்தை இனத்தை அருகிய இனம் எனப் பட்டியலிட்டுள்ளது. சிறுத்தை இனம் என்பது, பாதுகாக்கப்படவேண்டிய இனம் என, வனவிலங்குப் பாதுகாப்பு அதிகாரிகளால் பலவிதமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும், இந்த நடவடிக்கைகள் எதுவுமே போதாது என்பதையே, கடந்த மாதங்களாக நடைபெற்று வரும் சிறுத்தை மரணங்கள் நிரூபித்து வருகின்றன. அத்துடன், எவ்வளவு செய்திகள் வெளியாகி தண்டனைகள் வழங்கப்படாலும், மீண்டும் தொடர்ந்து நடைபெறுவதற்கான இந்தச் சிறுத்தை மரணங்கள், சட்டத்தின் பலவீனத்தால் நடைபெறுகின்றனவா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

தங்களது விவசாயங்களை, பன்றிகளிடம் இருந்து பாதுகாப்பதற்கும் தாங்கள் வளர்க்கும் செல்லப்பிராணிகளை சிறுத்தைகளிடம் இருந்து பாதுகாப்பதற்குமாகவே, இந்த பொறி வைக்கப்படுகின்றது. பல பெருந்தோட்டங்கள் தற்போது காடுகளாகியுள்ள நிலையில், அல்லது காட்டுப்பகுதிகள் அழிக்கப்பட்டு தேயிலைத் தோட்டங்கள் ஆக்கப்பட்டுள்ள நிலையில், தான் குறித்து வைத்துள்ள பகுதிகளில் வலம்வரும் சிறுத்தைகள், நாய் போன்ற வீட்டில் வளர்க்கும் பிராணிகளையே வேட்டையாடுகின்றன. இதனால், பிரதேசங்களில் வசிக்கும் எந்தவொரு மனிதருக்கும், இத்தனை காலமும் பாரிய பாதிப்புகள் ஏற்பட்டிருக்கவில்லை. மேலே குறிப்பிடப்பட்டன கருஞ்சிறுத்தையொன்று பிடிக்கப்பட்ட மஸ்கெலியாவின் வாழைமலை தோட்டத்தில், சமீபத்தில் முன்னெடுக்கப்பட்ட செயற்றிட்டமொன்றின் போது, 65 பொறிகள் கண்டுபிடிக்கப்பட்டு, அவை நீக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சியாகச் சிறுத்தைகள் உயிரிழந்து வருவதைத் தடுக்கும் முகமாக, வனவிலங்கு பாதுகாப்பாளர் டொக்டர் சுமித் பிலாபிட்டிய தலைமையில், மலையகத்திலுள்ள சில தோட்டங்களில், சிறுத்தைகள் தொடர்பான விழிப்புணர்வு, சிறுத்தைகள் தோட்டத்துக்குள் நுழைந்தால் என்ன செய்வது, பொறிகளைக் கண்டால் அவற்றை எவ்வாறு செயலிழக்கச் செய்வது உள்ளிட்ட பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், இந்தச் செயற்றிட்டம் போதாது என்றும் மேலும் பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டால் மாத்திரமே, சிறுத்தைகள் பொறியில் சிக்கி உயிரிழக்கும் நிலை கட்டுப்படுத்தப்படும் என, டொக்டர் பிலபிட்டிய தெரிவித்திருந்தார்.

**மாறவேண்டியது மனிதர்களே**

**எதிரிபோன்று பார்க்காதீர்கள்**

**இரை தேடி நுழையும் சிறுத்தைகளை பலியாக்காதீர்கள்**

**விழிப்புணர்வுகளை மதித்தால் உயிரிழப்புகள் குறையும்**

**சிறுத்தை சிக்கினால் 1992க்கு அழையுங்கள்**

**பொறி வைப்பதில் கட்டுப்பாடுகள் அவசியம்**

**மனிதம் திருந்தவில்லை என்றால், எதிலும் பயன் கிடைக்காது**

## கண்டால் விலகுங்கள்

சிறுத்தையொன்றை தேயிலைப் பகுதியிலோ காட்டுப் பகுதியிலோ எவராவது ஒருவர் இனங்கண்டால், அதை துரத்தவோ எதிர்க்கவோ எவரும் முயலக்கூடாது என்று பலமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு, துரத்துவதன் மூலம் வந்த வழியே அவை சென்றுவிடும் என்றோ அல்லது அதனது இருப்பிடத்துக்கு சென்றுவிடும் என்றோ நினைப்பது மிகவும் தவறு. சிறுத்தைகள், இயற்கையாக மனிதர்களைத் தவிர்க்கவே வாய்ப்புகள் அதிகம். ஆனால், சிறுத்தையை எரிச்சலூட்டும் அல்லது அவற்றை சீண்டிவிடும் எந்தவொரு செயற்பாட்டையும் மனிதன் முன்னெடுக்காத வரைக்கும், சிறுத்தை, மனிதனைத் தவிர்த்தே இருக்கும். முக்கியமாக, சிறுத்தையொன்றைக் கண்டால், அது இருக்கும் இடத்துக்குச் செல்லாம், விலகியிருப்பதே சிறந்தது என்ற விழிப்புணர்வை, மலையகத்தில் ஏற்படுத்துவது மிக முக்கியமானதாகும்.

## பொறி வைப்பதன் பாதிப்பு



பன்றிகளுக்கு என்று ஏற்கெனவே விவசாயிகளால் வைக்கப்பட்ட பொறிகள், தற்போது வீட்டுச் செல்லப் பிராணிகளைக் காப்பாற்றிக்கொள்வதற்காக, சிறுத்தைகளுக்காகவும் வைக்கப்படுகின்றன என்றும் கூறப்படுகின்றன. அநேகமாக, காட்டுப்பன்றிக்கு வைக்கும் இந்தப் பொறியில், சிறுத்தைகள் எளிதாகச் சிக்கிக்கொள்கின்றன. இந்தப் பொறி, சாதாரணமாக, விவசாயிகளால் மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன், திறந்த சந்தையில் இதை சாதாரணமாகக் கொள்வனவு செய்யக்கூடியதாக உள்ளது. எனவே, இதைத் தயாரிப்பதற்கான கேபிளைக் கொள்வனவு செய்வதில் பல கட்டுப்பாடுகளை விதித்தால், சிலவேளை, பொறிகளை வீடுகளில் செய்வதைக் கட்டுப்படுத்த முடியும்.

இந்தப் பொறி வைத்தல் என்பதே, இலங்கையில் சட்டவிரோதமானது. இவ்வாறு பொறி வைக்கும் நபர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கப்பட்டல் வேண்டும் என்பது, பல காலமாக காட்டு விலங்கு பாதுகாவலர்கள் உள்ளிட்ட சூழலியலாளர்களின் வேண்டுகோளாக இருந்து வருகின்றது. சிறுத்தைக்கு இரையாகும் விலங்குகள் காட்டில் கிடைக்காதபோதே, அவை, நாய்களைத் தேடி மக்கள் வாழும் பிரதேசங்களுக்குள் ஊடுருவுகின்றன என்ற நிலை இருக்கும்போது, காட்டுக்குள் இருக்கும் மிருகங்களை வேட்டையாடுவதை மக்கள் தவிர்க்கும் பட்சத்தில், சிறுத்தைக்கு இரையாகும் காட்டு விலங்குகள் குறையாமல் இருக்க, நாய்கள் பலியாவது தடுக்கப்படும்.

## வேலி அமைத்தல் சாத்தியமா?

சிறுத்தைப் பிரச்சினை அதிகமாக உள்ள பகுதிகளில் காட்டுக்கும் தேயிலைத் தோட்டத்துக்கும் இடையில் வேலி அமைக்கும் செயற்றிட்டம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.



சில காட்டு விலங்குகளை, சொந்தத் தேவைக்காக இறைச்சியாக்குவதற்கும் விற்பனை செய்வதற்கும், சில இடங்களில் பொறி வைக்கப்படுகின்றன. இது ஒருபுறமிருக்க, காட்டு விலங்குகளிடம் இருந்து விவசாயத்தையும் தங்களையும் பாதுகாத்துக் கொள்ளவும் பொறிகள் வைக்கப்படுகின்றன. ஆனால், காட்டு விலங்குகளால் பாதிக்கப்படும் பயிர்களில் தேயிலை உள்ளடங்குவதில்லை. தேயிலைத் தோட்டத்துக்குள் இருக்கும் மரக்கறி தோட்டங்களையும் அதன் அருகில் இருக்கும் கிராமங்களை பாதுகாக்கவுமே பொறிகள் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. எனவே, இந்த வேலிகள் அமைப்பதன் மூலம், பொறிகள் வைக்கப்படும் அளவு குறைக்கப்படும் என்று, வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

கடந்தகால சிறுத்தை உயிரிழப்புச் சம்பவங்கள் தொடர்பாக அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அண்மையில் வனவிலங்குப் பாதுகாப்புத்துறை பணிப்பாளர் நாயகம் எம்.ஜி.சி.சூரிய பண்டாரவுக்கு உத்தரவிட்டிருந்தார். இந்நிலையில், இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த சூரிய பண்டார, மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்கு நேரம் தேவை என்று கூறியிருந்தார்.

2020ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதிகளில், ஹம்பாந்தோட்டை, இராவணன் எல்லை, நுவரெலியா மாவட்டத்துக்குட்ட கந்தப்பளை, புஸ்ஸலாவ, லுணுங்கம்வெஹெர தேசிய பூங்கா, அங்கமெதில்லா, யட்டியாந்தோட்ட, கிண்ணியா, மஸ்கெலியா போன்ற பல பகுதிகளில், பல பொறிகள் மீட்கப்பட்டிருந்தன. பல பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட விழிப்புணர்வு நடவடிக்கைகளின் போது, ஒரு சிறுத்தை பொறியில் சிக்கினால், 1992 எனும் அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைக்குமாறு கோரப்பட்டிருந்தது. அத்துடன், இது தொடர்பான அலைபேசி செயலியொன்றும் சமீபத்தில் உருவாக்கப்பட்டிருந்தது. அத்துடன், ஒவ்வொரு பகுதிகளிலும், சிறுத்தை மீட்பு அவசர குழுவொன்றும் அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது. எனினும், இவை அனைத்தையும் மீறி, மேலும் சிறுத்தைகள் உயிரிழப்பதற்கு, மக்களின் அசமந்தப் போக்கே காரணம் எனலாம். சிறுத்தை உயிரிழப்பு தொடர்பாக, மக்கள் மத்தியில் பல விழிப்புணர்வுகள் எடுக்கப்பட்டாலும் இந்த விழிப்புணர்வுக்கு ஏற்ற வகையில், மக்கள் மாறவில்லை என்றால், எதுவுமே மாறப்போவதில்லை. மலையகத்தின் பல பகுதிகளில், பல விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தாலும், பொறிகளை வைப்பதில் மக்கள் இன்னும் செயற்பட்டே வருகின்றமை அவதானிக்க முடிகின்றது.

சிறுத்தைத் தோலுக்கு கேள்வி இருப்பதால், தோலைப் பெறுவதற்காகப் பெருந்தொகையான சிறுத்தைகள் இதற்கு முன்னர் வேட்டையாடப்பட்டு வந்தன. அத்துடன், வெளியில் தெரியாமல், இன்னும் வேட்டையாடப்பட்டு வருகின்றன. காடழித்தல், காட்டுக்குத் தீ வைத்தல் போன்ற மனிதச் செயற்பாடுகள் காரணமாகவும் சிறுத்தைகளின் இயல்பான வாழ்க்கைக்கு ஆபத்து ஏற்பட்டு வருகின்றன. இதனால், இலங்கைச் சிறுத்தைகளைப் பாதுகாக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கம், இலங்கைச் சிறுத்தையை அருகிய இனமாகப் பிரகடனம் செய்துள்ளது. காட்டுயிர் பாதுகாப்பு நம்பிக்கை அமைப்பும், இலங்கை அரசாங்கத்துடன் நெருக்கமாக இலங்கைச் சிறுத்தைப் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளது. எனினும், இத்தனை செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டும், மனிதம் திருந்தவில்லை என்றால், எதிலும் பயன் கிடைக்கப்போவதில்லை என்பதை புரிந்துகொண்டால் நல்லது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் வியாழக்கிழமை, 27 ஒகஸ்ட் 2020, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.